# போராட்டம்

2013 நவம்பர்-டிசம்பர் இதழ் 06 நன்கொடை 30.00 ரூபா

# நவ தாராளமய ஆக்கிரமிப்போடு எதிர்ப்பு தீவிரம்! அடக்குமுறை உக்கிரம்!

## நீங்கள் மரணிக்கவில்லை...



87-89 கால கட்டத்தில் நடந்த போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த முற்போக்குவாதிகளை நினைவு கூர்தல் நிகழ்வு நாடு பூராவும் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பாக நடந்தேறின. கேகாலையில் நடந்த நிகழ்வின்போது அன்றைய போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த தோழர் ரஞ்சிதம்குணரத்தினத்தின் தாயார் செங்கொடி ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

**நவ தாராளமய கொள்கைக்கு ஏற்ப கல்வி, சுகாதாரச் சேவை, நீர் போன்ற பொது சேவைகள் மற்றும் வளங்களை விற்பனைப் பண்டங்களாக மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிராக பாரிய எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. மூலதனத்தின் சொந்தக்காரர்களுக்கு இலாபத்தை குவித்துக் கொள்வதற்காக கட்டுப்பாடற்ற சூழலை ஏற்படுத்தி வெகுஜன வாழ்க்கையை சீரழித்து பல்தேசியக் கம்பனிகளுக்கு இடமளிக்கும் கொள்கையின் மீது மக்களின் எதிர்ப்பு வலுவடைந்திருக்கின்றது.**

மக்கள் சேவைகளை வர்த்தகமயமாக்குவதற்கு எதிராக கடந்த சில மாதங்களாக மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரது போராட்டங்கள் வலுவடைந்திருப்பதோடு, அதற்கெதிரான அரச அடக்குமுறையும் அதிகரித்துள்ளது. இரண்டு மாத இடைவெளிக்குள் 50 பல்கலைக் கழக மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த உதாரணமாகும். சூழலை மாசடையச் செய்யும் ஒரு நிறுவனத்திற்கு எதிராக வெலிவேரிய மக்கள் நடத்திய போராட்டத்தின் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதோடு, காலி ஹபராதுவையில் பாதனிகள் உற்பத்திச் செய்யும தொழிற்சாலையினால் ஏற்பட்டுவரும் சூழல் மாசடைதலுக்கு எதிராகப் போராடிய சமூகச் செயற்பாட்டாளரின் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்துள்ளார்கள்.

சுற்றுலாத்துறையை முன்னெடுக்கும் நவ தாராளமய உபாயத்திற்கேற்ப அரசாங்கம் கடந்தகாலங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் எதிர்பிற்காளாகின. கஸ`னோ சூதாட்டத்தை முன்னேற்றுவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள புதிய சட்டத் திருத்தங்கள் குறித்து சமூகத்தின் பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நகர்புற காணிகளை முதலீட்டார்களிடம் ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்டு தமது குடியிருப்புகளிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கும் மக்களின் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்த நிலையில் அரசாங்கம் அடக்குமுறை இயந்திரத்தையும் கருத்துவாத நடவடிக்கையையும் வேகப்படுத்தியுள்ளது. இந்த போக்கை தோற்கடிப்பதற்கான மக்கள் கருத்தை கட்டியெழுப்புவது குறித்து முன்னிலை சோஷலிஸக் கட்சி ஆராய்ந்து வருகிறது.

## இடதுசாரய கட்சிகளுடனும் செயற்பாட்டாளர்களுடனும் சந்திப்பிற்குத் தயார்

சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் முதலாளித்துவத்திற்குள் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அதற்கு ஏற்றவகையில் சமூகச் சிந்தனையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் இதற்குள் இடதுசாரி இயக்கத்தின் அரசியல் அனுகுமுறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து விவாதத்தை வர்க்கத்திடம் எடுத்துச் செல்லும் திட்டத்தை முன்னிலை சோஷலிஸக் கட்சி வகுத்துள்ளது.



4 நீங்கள் மரணிக்கவில்லை...

7







11 காணாமற் போனவர்களுக்காக குரல் கொடுத்து காணமற் போனவர்..!

நீங்கள் மரணிக்க..(4ம் பக்க தொடர்ச்சி )

புதிதாகப் பிறக்கிறார்கள். மறுபுறம், அவர்கள் வரலாறு நெடுகிலும் மனித சமுதாயத்தின் போர்க்குணத்தையே பிரதிநிதித்துவம் செய்தார்கள். ஸ்பாடகஸிலிருந்து ஆரம்பித்து இன்று வரை விரிவடைந்து வரும் வர்க்கப் போராட்டம். அவர்கள் சுவர்களில் எழுதினார்கள் " மண்டியிட்டு வாழ்வதைவிட நிமிர்ந்து நின்று மரணிப்பதே மேல்" என்று. ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாறு நெடுகிலும் போராடியது அந்த நோக்கத்தோடுதான். அடிமைத்தனத்திற்கு இழிநிலைக்கு எதிராகப் போராடினார்கள். கார்த்திகை வீரர்கள் அந்த வரலாற்றுச் சம்பிரதாயத்தின் ஒரு சந்தர்ப்பமேயாகும்.

80களின் கிளர்ச்சியில் பல வரையறைகள் இருந்தன. நிறைய குறைபாடுகள் இருந்தன. அது குறித்து அரசியல் விமர்சனங்கள் இருக்கக் கூடும். சமூகத்தோடு இணைந்து செயற்பட்டு சமூகத்தை செயற்பட வைப்பதற்கு எங்களால் முடியவில்லை. ஆகவே, சில வேளைகளில் முழு சமூகமும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை தனிக்கட்சியாக செய்ய முயற்சிக்கப்பட்டது. அதேபோன்று சமூகத்திற்கு மேலால் இருந்துக் கொண்டு சமூகத்திற்கு கட்டளையிடும் குற்றத்தில் சிக்கிக் கொண்டது. போராட்டத்திற்குள் பல பிற்போக்குத்தனங்களும் காணப்பட்டதை எங்களால் நிராகரிக்க முடியாது. சமூகத்தில் காணப்பட்ட பிற்போக்குத்தனங்கள் போராட்டத்திற்குள்ளும் பிரதிபலித்தன. தேசியவாதத்தை பயன்படுத்தியதிலும் குறைபாடுகள் காணப்பட்டன. பிற்காலத்தில் நடந்ததைப் போன்று இனவாதிகளாகி முதலாளித்துவ அரசாங்கங்களோடு சோரம்விட்டாலும், அதற்கான மூலக்கூறுகள் அந்தப் போராட்டத்தில் இருந்தன. குறைபாடுகள் இருந்தனவென்று கூறுவதற்கு நாங்கள் அச்சப்படவில்லை. குறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். குறைபாடுகளைக் குறித்து மாத்திரம் குறை கூறுவோருக்கு நாங்கள் நினைவூட்டுவது என்னவெனில், எந்த நோக்கத்திற்காக பயணிக்கும்போது அந்தக் குறைகள் ஏற்பட்டன என்பதை சிந்தித்துப் பாருங்கள் என்று.

மிகச் சிறந்த நாடொன்றிற்காக பின்வாங்காது போராடும்போது, அவர்கள் காட்டிய தீரம், அவர்களிடமிருந்த விட்டுக்கொடுக்காத மனப்பான்மை இன்றும் கூட எங்களுக் வழி காட்டுகின்றன. இந்தப் போராட்டம் அர்த்தமற்றதென சிலர் கூறுகிறார்கள். அது அர்த்தமற்றதென தானாகவே தீர்மானமாகாது. எமது பரம்பரையும், எதிர்கால் பரம்பரையுமே அதனைத் தீர்மானிக்கும். 1917 புரட்சியின் பின்னர் லெனின் கூறினார், 1905ன் மகத்தான தோல்வி இல்லையென்றால் 1917ல் வெற்றி கிடையாதென்று. கார்த்திகை வீரர்களின் போராட்டம் அர்த்தபுஷ்டியாக வேண்டுமாயின் நாம் அவர்களது நோக்கத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அப்போதுதான் லெனின் கூறியதைப் போன்று, இன்று கிடைத்த வெற்றியின் அடிப்படை கார்த்திகை வீரர்களின் மகத்தான தோல்விதானென உரத்துக் கூற முடியும்.

இவையெல்லாம் கனவுகள் என்று எவராவது கூற முடியும். ஆனால், மனித சமூகத்தில் எதார்தமாகியிருக்கும் ஒவ்வொன்றும் ஒரு காலத்தில் கனவுகளாக இருந்தவைதான். இப்போது எமது முன்னிலையில் புகைப்படக் கருவியொன்று இருக்கிறது. மனித நடவடிக்கைகளைப் பாதுகாப்பது என்பது 15ம் நூற்றாண்டு வரை கனவாகத்தான் இருந்தது. இப்போது அது நனவாகிய கனவாக எம்முன்னே காட்சியளிக்கிறது. விண்வெளிக்கு மனிதர்கள் செல்வது 20 ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை வெறும் கனவாகவே இருந்தது. இப்போது அது நனவாகிய கனவாகியிருக்கிறது. கார்த்திகை வீரர்கள் கண்ட நீதிமிக்க சமுதாயம், நீதிமிக்க நாடு, சுதந்திர மனிதன் என்று கனவை நனவாக்க முடியும். அந்தக் கனவை எதார்த்தமாக்க வேண்டும். பிரபல ஆங்கிலப் பாடலொன்று இருக்கின்றது "இமேஜின்" என்று இமேஜின் என்பதன் அர்த்தம் கற்பனை செய்தல், நினைத்துப் பார்த்தல் என்பதாகும். அந்தப் பாடல் கனவைப் பற்றிக் கூறுகிறது. பாடலின் கடைசி வரிகள் இப்படிக் கூறுகின்றன, நீங்கள் கூறலாம், நான் கனவு காண்பவனென்று. நான் கனவு காண்பவன்தான். ஆனால், நீங்களும் அந்தக் கனவை காணும் நாளில் அந்தக் கனவு நனவாகிவிடும். உலகம் திறந்தவெளியாகிவிடும் என்று. கார்த்திகை வீரர்கள் கண்டது கனவுதான் எனக் கூறுபவர்களுக்கு நாம் கூற வேண்டியதும் இதைத்தான். நீங்களும் அந்தக் கனவைக் காணும் நாளில், அந்தக் கனவோடு சேரும் நாளில் அந்தக் கனவு நனவாகிவிடும். சமத்துவம், சமூகநீதி, மற்றும் சுதந்திரத்துடனான உலகம் உதயமாகும்".

CHOGM..(10ம் பக்க தொடர்ச்சி )

விற்கப்படும். இந்த வலயங்கள் உங்களுடைய பிள்ளை படிப்பதற்காகவா? 65லட்சம் 70 லட்சம் கொடுத்து உங்கள் குழந்தைக்கு பட்டத்தை வாங்கிக் கொடுக்க உங்களால் முடியுமா?

விற்கப்படும் கல்வி

உங்கள் பிள்ளை செல்லும் பாடசாலைக்கு, பல்கலைக் கழகத்திற்கு கொடுக்க இந்த அரசாங்கத்திடம் பணம் இல்லையாம். ஆனால், இந்த முதலீட்டு வலயங்களில் கடைகளைத் திறக்கும் கோடீஸ்வரர்களுக்கு மில்லியன் கணக்கில் கொடுக்க பணம் உள்ளதாம். அது மட்டுமா இலவசமாக காணிகள் கூட வழங்கப்படுகின்றன. இந்த அரசாங்கம் யாரை பிரதிநிதித்துவம் செய்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறதல்லவா. இவற்றால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய பிரதிபலன் என்ன? கடைசியாக அரசாங்கப் பாடசாலைகளும், பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டுவிடும். தனியார் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் திறக்கப்படும். அது மாத்திரமல்ல, அரசாங்கத்தினது என்று எஞ்சபவைகளுக்கும் கோடிக்கணக்கில் செலுத்த நேரிடும். இதன் கடைசிப் பிரதிபலன்தான், இந்நாட்டின் பெற்றோர்கள் என்ற வகையில் நீங்கள் கல்விக்காக கோடிக்கணக்கில் செலவளிக்க வேண்டும். முடியாவிட்டால் கல்வியைப் பற்றி நினைப்பதையே கைவிட்டுவிட வேண்டும். அப்படி நடக்கக் கூடாதென்று நாங்கள் நினைக்கிறோம். கல்வி கற்க வேண்டிய உரிமையை எல்லோரும் பெற்றுக் கொள்ள வேண்டும். எங்களுக்கு மாத்திரமல்ல. இந்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தான் விரும்பும் தூரத்திற்கு கல்வி கற்கும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமையைப் பெறுவதற்காகவே நாங்கள் இன்று வீதியில் இறங்கியிருக்கிறோம். ஆனால், நாங்கள் தனித்தனியாகப் போராடி அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியாது. பெற்றோர்களும் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் ஊமைகளாக இருக்கும் வரை ஆட்சியாளர்கள் இந்த அழிவை தொடர்ந்தும் செய்துக் கொண்டுதான் இருப்பார்கள். சமூகம் என்ற வகையில், நாடு என்ற வகையில் நாங்கள் இந்த ஆபத்தை அறிந்து அதனை எதிர்ப்பதில் முன்னிலை வகிக்க வேண்டும். பணமுதலைகளின் இலாபத்திற்காக அனைத்தையும் கொள்ளையடிக்கும் இந்த சமூகத்திற்கு எதிராக சமூக நன்மையை கருத்தில் கொண்ட சமூகத்திற்காக போராட வேண்டும். அப்படியில்லாவிட்டால், இந்நாட்டின் பெரும்பாலான மக்களுக்கு தமது அறிவுக் கண்களைத் திறந்து கொள்வதற்கான உரிமை மாத்திரமல்ல, மூச்சு விடும் உரிமையும்கூட மறுக்கப்பட்டுவிடும். தூள் மாபியா, விபச்சாரம் போன்ற முதலாளிகளினது வியாபாரங்களின் பலிக்கடாக்களாக, எவ்வித மனிதசாரமும் அற்ற வெறும் தூசுகளாக இந்நாட்டு பிள்ளைகள் ஆளாக்கப்படுவர். அதற்கு இடமளிப்பதா, இல்லையாயின் இலவசக் கல்வியையும், கல்வியில் சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் போராடுவதா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். போராடுவதைத் தவிர மாற்றீடொன்று கிடையாது. நீங்கள் எடுக்கும் முடிவில்தான் எதிர்காலத்தை சுவர்க்கபுரியாக்குவதா, நரகமாக்குவதா என்பது தீர்மானிக்கப்படும்.

ஆயுதம் போட்டு பிடிக்கும் (2ம் பக்க தொடச்சி)

நின்ற கிராமவாசிகளின் வீடுகளுக்கு சென்ற பொலிசார் எந்தத் தகவல்களையும் ஊடகங்களுக்கு வெளியிட வேண்டாமென அவர்களை அச்சுறுத்திச் சென்றுள்ளனர்.

அதேபோன்று, தமிழ் பத்திரிகையொன்றின் ஆசிரியரது வளவிற்குள் கஞ்சாப் பொதியை வைத்து அவரைக் கைது செய்துள்ளார்கள். கல்விப் பிரச்சினைகளை முன்வைத்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யக்கூடும் என்ற சந்தேகத்தில் ஊர்முழுஆ முடியும் வரை பல்கலைக் கழகங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அரசாங்கம் புதிய முறையிலான அடக்குமுறையை அவிழ்த்து விட்டுள்ளது. .உலகின் பெரும்பாலான நாடுகளிலுள்ள இரசாயண தொழிற்சாலைகளுக் அந்நாடுகளின் மக்களின் எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக அந்த நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளை இந்நாட்டில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கின்றது. 77ல் நவ தாராளமயத்தின் இரண்டாம் கட்டத்தை அமுல்படுத்திய நேரத்தில், வெளிநாட்டு முதலீட்டாளர்களை முத்தமிட்டு வரவேற்பதாக ஜே.ஆர். ஜயவர்தன கூறினார். அப்படி வரவேற்ற முதலீட்டாளர்கள்தான் இன்று சுற்றாடலையும் நாட்டு மக்களின் வாழ்க்கையையும் சூறையாடி இலாபமீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஊர்முழுஆ ஊடாக வருவதாகக் கூறப்படும் முதலீட்டாளர்கள், இந்நாட்டை விஷ இரசாயண கழிவுகளின் குப்பைத் தொட்டியாக மாற்றி சுற்றாடலையும் மக்களையும் அழிவுக்குள் இட்டுச் சென்று இலாபமீட்டும் நோக்கத்துடனேயே வருகிறார்கள். இதுதான் நவ தாராளமய முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டம்.

ஆகவே ஏற்படவிருக்கும் சம்பவங்களின்போது தனித்தனியாகப் போராடுவதனால் மாத்திரம் திருப்தியடையாது, இந்த அழிவைக் கொண்டு வரும் முதலாளித்துவத்திற்கு எதிரான பொதுப் போராட்டத்திற் மக்களின் அணிதிரள்வு அத்தியாவசியமாகுமென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்".

வெளியுலகத்...(2ம் பக்க தொடர்ச்சி)

உள்ள கிணற்றிலிருந்துதான் பெற்றுக்கொள்கிறார்கள்.

"யாருக்காவது சுகயீனம் என்றால்கூட நோயாளியை காட்டுவழியே தூக்கிக்கொண்டுதான் போக வேண்டும். மலைப்பாம்புகள் அதிகமாக நடமாடும் இந்தக் காட்டுப்பகுதியில் அச்சத்துடன் கூடிய மரணத்தின் விளிம்பில் வாழ்கின்றார்கள் இம்மக்கள்.

அரம்பஹேனயிலுள்ள சிறுவர்கள் அருகிலுள்ள குடகங்கை என்ற தோட்டத்திலுள்ள பாடசாலைக்குச் செல்கிறார்கள். அந்தப் பாடசாலை தரம் 9 வரை மாத்திரமே கொண்டு இயங்குகிறது. அதற்கு மேல் கல்வி கற்பதற்கு மத்துகமை நகருக்கு மாணவர்கள் செல்ல வேண்டும். மாணவர்கள் அந்நகருக்கு பல கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே கல்வி கற்கவேண்டியுள்ளது் நீண்டதூரம் நடக்க வேண்டியதால் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியோரும் உள்ளனர்.

இத்தோட்டத்தில் உள்ளவர்களுக்கு யாராவது கடிதம் அனுப்பினால் கூட அது உரியர்களை சென்றடைவதில்லை. தபால்காரரே இல்லாத தோட்டத்தில் எப்படி கடிதம் கிடைக்கும்?

அரம்பஹேன தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத காரணத்தினால் அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் எதனையும் வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் மறுப்பு தெரிவிப்பதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கூறுகிறார்கள். தோட்ட நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினால் முழுத் தொழிலாளர்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குரல் வெளியு லகுக்கு கேட்காவண்ணம் திட்டமிட்டே அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

தோட்டத்தில் தொழில் வழங்கப்படாத தருணத்தில் நிர்வாகம், வேறு தோட்டங்களில் இவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுத்திருக்க முடியும். அல்லது ஏதாவது மாற்றீடான திட்டங்களை செய்திருக்கலாம். தோட்டம் மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் தொழில் வழங்கப்பட வேண்டும் அல்லது வேறு இடத்தில் தமக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இதோட்டம் முழுவதும் காடாக மாறியமைக்கு யார் பொறுப்பு? ஒவ்வொரு நிமிடத்தையும் அச்சத்துடன் கழித்துக்கொண்டிருக்கும் மக்களை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் யார்? பெரும்பான்மை இனத்தோர் வாழ்கின்ற தோட்டங்கள் சரியாக நிர்வகிக்கப்படுகின்ற போது இந்தத் தோட்டம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்கப்பட்டது ஏன்? இக்கேள்விகளை யாரும் கேட்கமுடியாமல் முடக்கப்பட்டுள்ள மக்களின் குரல்கள் ஒரு சில ஊடகங்களுக்கு ஊடாக இப்போதான் வெளியில் வருகின்றன.

மகிந்த ஆட்சி பன்னாட்டு கம்பனிகளுக்காக தாரைவார்க்கும் "நவீனங்கள்" கொண்ட அபிவிருத்தியில் ஒரு துளியையாவது இத்தோட்ட மக்களுக்கு செய்யுமா? செய்யவே செய்யாது. இவ்வரசு மக்களுக்கானதல்ல நவதாராளவாதிகளின் தாராள நலன்களுக்கானது.

வெள்ளை யானை...(6ம் பக்க தொடர்ச்சி)

"கௌரவுரமான" நன்நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டு தற்போது அதுவும் வெள்ளையானை ஒன்றாக மாறிவிட்டது. 15 பில்லியன் ரூபாயினை விழுங்கிய இந்த நிலையம் நிரந்தரமாகவே இயங்காது போகும் நிலையடைந்துள்ளது. இதுவரை 19 தடவைகள இயக்கமுடியாமல் நின்று போயுள்ளதாக தகவல்கள் கிடைக்கின்றன.

இந்நிலையத்தினை கட்டிமுடிக்க பெறப்பட்ட கடனினை திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலுள்ள அரசாங்கமானது பங்குதாரர்களிடம் பெற்ற கடனுக்காக அவர்களிடமே கையளிப்பதென்ற எண்ணத்திலுள்ளது.

மகிந்த ராஜபக்ச நஷனல் ரெலி சினிமாப் பூங்கா

மகிந்த ராஜபக்ச நஷனல் ரெலி சினிமாப் பூங்கா அம்பாந்தோட்டை ரன்மினிதென்ன என்றவிடத்தில் 2 பில்லியன் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 2010ம் ஆண்டு திறக்கப்பட்டது. இந்த பூங்காவினை கட்டியெழுப்பதற்கான நிதியானது வெளிநாட்டு திரைப்படங்கள் மற்றும் ரெலி நாடகங்கள் போன்றவற்றின் மீது விதிக்கப்பட்ட வரியினால் ஈட்டிய வருமானத்தினாலாகும். கட்டண சலுகைகள் வழங்கப்பட்டிருந்தும் கூட படப்பிடிப்புகள் ஒருசில அல்லது ஒன்றுமேயில்லை என்றளவுக்கு பிரயோசமற்றதாகி இருப்பதாக சொல்லப்படுகிறது.

நாட்டு மக்கள் மேல் எந்தளவுக்கும் அக்கறையின்றி மேற்கொள்ளப்படும் இந்தக் குறுகிய உபாயங்களின் பாரிய பின்விளைவுகளை எதிர்கொள்ளும் காலம் மிகவும் அதிக தொலைவில் இல்லை. ராஜபக்ச ஆட்சி மற்றும் முந்தைய முதலாளித்துவ ஆட்சிகள் யாவும் மீண்டும் நிரூபிப்பது என்னவெனில் அவர்கள் தங்களது வர்க்கத்துக்குள்ளேயான அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு எதையும் செய்வார்கள் என்பதாகும்.

அனைத்துவகையான இன மத பால் பாகுபாடுகளோடு, கல்வித்துறை, சுகாதாரம் போக்குவரத்துத்துறை போன்ற அனைத்து துறைகளிலும் ஏற்பட்ட தோல்வி, நாட்டு மக்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் தாங்க முடியாதளவு கடன் சுமைகள் என்பன எங்களது வாழ்க்கையில் சுமையாக மேலும் அழுத்தப்போகின்றன. நாட்டின் ஒவ்வொரு குழந்தையும் ஏகாதிபத்திய நிறுவனங்களின் கடனாளியாக்கப்படுகிறபோது தோல்விகளும் நடத்தைப்பிறழ்வுகளும் எளிதில் உருவாகி சீரழிய ஏதுவாகின்றன. மக்கள் மத்தியில் பொருளாதார நன்மைகளை சமமாக பகிர்ந்தளிக்கும் ஒரு மக்களுக்கான புதியமுறை அரசை நிறுவுதற்கு மக்கள் தீர்மானிப்பதற்கு பதிலாக, முதலாளித்துவ அரசாங்கங்கள் தங்களை நாளுக்கு நாள் காப்பாற்றிக் கொள்வதற்காக பெறப்படும் கடன் சுமையை மக்கள் ஒவ்வொருவர் மேலும் திணிக்கும் நிலையானது பொறுத்துக் கொள்ளப்படும் வரை இந்த நெருக்கடியில் இருந்து நாட்டை காப்பாற்றுவது கடினமானதாகும்.

# யாழ் பல்கலைக் கழகம் ஒரு மாதம் மூடப்பட்டதை வெறுப்போடு கண்டிக்கின்றோம்

2013 நவம்பர் 11ம் திகதியிலிருந்து டிசம்பர் 02ம் திகதி வரை யாழ். பல்கலைக் கழகத்தை மூடுவதற்கு பாதுகாப்புப் பிரிவுகளின் வற்புறுத்தலின் பேரில் பல்கலைக் கழக உயரதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள். யுத்தத்தில் இறந்த தமது உறவுகளை நினைவு கூர்தலை தவிர்ப்பதுதான் இதன் நோக்கமாக இருக்கின்றது. கடந்த வருடத்திலும்கூட இவ்வாறான சம்பவமொன்று நடந்தது. மாவீரர் தினத்திற்குச் சமமாக யாழ் பல்கலை மாணவர்களால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றிற்குள் திடீரென நுழைந்த பாதுகாப்புப் படையினர் மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கி மாணவர் தலைவர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகத்தான் இம்முறையும் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருக்கின்றது.

இந்த முடிவு நாட்டின் ஜனநாயகம் மற்றும் மனித சுதந்திரம் சம்பந்தமாக வரலாற்றில் வைக்கப்படும் கரும்புள்ளியா இருப்பதோடு, அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் நாம் இந்த முட்டாள்தனமான முடிவை வெறுப்போடு கண்டிக்கின்றோம்.

எல்.டி.டி.ஈ. இயக்கத்தையும் அதன் கொள்கைகளையும் நாங்கள் அனுமதிக்காவிடினும், தமிழ் மக்கள் இறந்த தமது மக்களை, தமது உறவுகளை நினைவு கூறும் உரிமைக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அவர்களது உரிமைக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். அவர்களது உரிமைகளுக்கு ஊறு விளைவிப்பதனால் அவர்களது இனவாத மற்றும் வன்முறை அடையாளங்களை தோற்கடிக்கவோ, ஜனநாயக நீரோட்டத்திற்குள் அவர்களை அழைத்து வரவோ முடியாது.

யுத்தமென்பது யுத்தமாகவே இருக்கின்றது. நாகரிக சமூகத்தினால் அதனை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது. யுத்தத்தின்போது யார் சரி என்பது குறித்து பேசுவது பலனற்ற காரியமாக இருக்கும் அதேவேளை, அதனால் அனைத்துப் பிரிவினருக்கும் அழிவு மட்டுமே எஞ்சி நிற்கும். ஆகவே மனித சமூகத்திற்கு, மனித வர்க்கத்திற்கு பொறுப்புக் கூறக் கூடிய மற்றும் அன்பு காட்டும் நபர்களுக்கோ, இயக்கங்களுக்கோ மனிதப் படுகொலை யுத்தத்தை அனுமதிக்கும் ஆற்றல் கிடையாது. வடக்கின் யுத்தத்தைப் பற்றிய எங்களது நிலைப்பாடு இதுதான்.

இந்த யுத்தத்தை நிர்மாணித்தவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனவாத பதவிப் பித்துப் பிடித்த ஆளும் வர்க்கமேயல்லாது, யுத்தத்தின் இரும்புச் பாதணிகளுக்கு மிதிபட்ட அல்லது தீக் குண்டுகளால் பொசுக்கப்பட்ட அப்பாவிகளல்ல. ஆகவே, ஆயுதங்களைக் கையிலெடுத்து ஒருவரையொருவர் கொலை செய்து கொண்ட எல்.டி.டி.ஈ. யினரையோ அல்லது இராணுவ சிப்பாய்களையோ குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது நீதியாக மாட்டாது என்பதோடு, இந்த கொடுமைகளுக்கான பொறுப்பை பதவிப் பேராசைக்காக இனவாதத்தை விதைத்த மற்றும் இப்போதும் அப்படியே செயற்படும் மூன்று இனங்களையும் சேர்ந்த ஆட்சியாளர்களையே குற்றவாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும்.

இந்த நாசமாய்ப்போன யுத்தத்தின் விளைவாக விலைமதிக்க முடியாத ஆயிரக்கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லிம் உயிர்களை நாடு இழந்தது. இழக்கப்பட்ட அந்த ஒவ்வொரு உயிருக்கும் மதிப்பொன்று இருப்பதோடு, அவர்களுக்காக கண்ணீர் சிந்தும், வேதனைப்படும் ஏதோவொரு மனித இதயம் இன்றும் கூட இந்த மண்ணில் இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதேபோன்று இறந்த அந்த உறவுகளுக்காக ஒரு துளி கண்ணீர் சிந்த, நினைவு கூர்வதற்கு உள்ள உரிமையை நாங்கள் ஏற்கவும் வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதங்களின்றி விலங்குகளைப் போன்று மனிதர்களை கொன்று போடும், மனித உயிர்களின் மதிப்புத் தெரியாத கொலைகார ஆட்சியாளர்கள் என்ன கூறினாலும், மனிதத்தை மதிக்கும் யாராலும் அந்த தீர்மானத்தை அங்கீகரிக்க முடியாது.

மரணித்த படை வீரர்களை நினைவு கூர்வதற்கு சிங்கள மக்களுக்கு உள்ள உரிமையைப் போன்றே தமது வீரர்களை நினைவு கூரும் உரிமை தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது. யுத்தம் என்பது இருசாரார்களுக்கிடையில் நடப்பதாகும். எந்தச் சாராரும் மற்றச் சாராரை அங்கீரிப்பது கிடையாது. மதிப்பது கிடையாது. அந்த முரண்களின் காரணமாகவே யுத்தம் நிர்மாணிக்கப்படுகின்றது. ஆகவே, எந்தவொரு பிரிவினருக்கும் மற்றப் பிரிவினர் எதிரிகளாகவேயல்லாது வீரர்களாகத் தெரிவதில்லை. இறந்த எதிர் பக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் துரோகியாகவும் தனது உறுப்பினர் வீரனாகவும்தான் தெரியும். இதன்படி பார்த்தால் யுத்தத்தினால் உயிரிழந்த தமிழ்ப் போராளிகள் வீரர்களாவர். இரு சாராரினதும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பிரிவதற்குக் காரணமான நிபந்தனைகளை ஒழித்துக் கட்டி, இருசாராரும் இருசாராரை மதிப்பதாயிருந்தால் மாத்திரமே அந்த நிலையை மாற்ற முடியும். இலலையாயின், வெற்றியடைந்த பிரிவினரின் வற்புறுத்தலின் மீது தோல்வியடைந்த பிரிவினரின் எண்ணங்கள், எதிர்ப்பார்ப்புக்கள் போன்றவற்றைத் தீர்மானிப்பதற்கு முயல்வதனால் மீண்டும் குரோத மனப்பான்மையே வளரும். படுகொலை யுத்தத்திற்கு மீண்டும் வழி திறக்கப்படும். ஆகவே, அவ்வாறு எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் ஜனநாயகமாக இருக்காததோடு, மனிதநேயத்திற்கும் எதிரானதாகும். எனவே, தமது வீரர்களை நினைவு கூர்வதற்காக தமிழ் மக்களுக்கு உள்ள உரிமையை ஏற்றுக் கொள்வது பயங்கரவாதமல்ல.

தமிழ் மக்களுக்கு அவர்களது சிவில் உரிமைகளை பெற்றுக் கொடுத்தல், ஜனநாயகத்தை மீள நிலைநாட்டல், ஏனைய சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல் மற்றும் வடக்கில் அரச பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் போன்றவற்றின் மூலமே மீண்டும் அவர்கள் ஆயுதபாணிகளாக மாறுவதைத் தடுக்குக முடியும். இல்லையாயின் இவ்வாறான இனவாதத் தீர்மானங்களால் தமிழ் இனவாதம் மீண்டும் ஊட்டி வளர்க்கப்பட்டுவிடும். மீண்டுமொரு யுத்தத்திற்கான பின்புலத்தை நிர்மாணிப்பதாக அமையும். இப்படியான ஒரு நிலையை ஆட்சியாளர்கள் விரும்புவது எங்களுக்குத் தெரியும். ஏனெனில், ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலான பிரிவினைகளைப் பயன்படுத்தி அவர்களால் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களும் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய உண்மையான எதிரிகளான மூன்று இனக்குழுமங்களையும் சார்ந்த ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மனிதர்கள் ஒன்றுகூடாதவரை, சிங்களவர்களின் எதிரிகளாக தமிழர்களையும், தமிழர்களின் எதிரிகளாக சிங்களவர்களையும் பார்க்கும்வரை, அவர்கள் ஒருவரோடொருவர் மோதிக் கொள்ளும் வரை தமது இருப்பு குறித்து ஆளும் வர்க்கத்திற்கு எந்தச் சவாலும் கிடையாது. இந்த எதார்த்தத்தை புரிந்துக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றுபட்டால் அது ஆளும் வர்க்கத்திற்கு மரண வேதனையாக இருக்கும். எனவேதான் அவர்கள் எப்பொழுதும் இனவாதத்தைத் தூண்டுவதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் முயற்சிக்கின்றனர். யாழ். பல்கலைக் கழகத்தை மூடியமை, அவர்களது நினைவு கூர்தலை தடுத்தமை போன்றவற்றின் பின்னணியில் அந்த நோக்கமே இருப்பதை புரிந்துக் கொள்ள வேண்டியதோடு, அதனால் ஏற்படக் கூடிய அழிவை தடுப்பதாயிருந்தால், நாங்கள் அனைவரும் இனவாதத்தை தூக்கி எறிந்துவிட்டு இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வேண்டும்.

அது ஜனநாயகத்தை கௌரவிக்கும் மனதநேயத்தை மதிக்கும், மீண்டுமொரு கொடூர யுத்தத்தை விரும்பாத அனைவரினதும் பொறுப்பாகும்.

# ஆயுதம் போட்டு பிடிக்கும் கலாச்சாரம்

துமிந்த நாகமுவ

ரத்துபஸ்வலையில் பின்நடவடிக்கை எடுத்த அரசாங்கம் போகஹகொடையில முன்நடவடிக்கை எடுத்து இரு கிராமவாசிகள் மீது பொய்க் குற்றம் சுமத்தி கைது செய்துள்ளதாக முன்னிலை சோஷலிஸக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ கூறினார். ஊடகச் சந்திப்பொன்றின்போது கருத்துத் தெரிவித்த அவர் தொடர்ந்து விளக்கமளித்தார்.

“ காலி மாவட்டதின் போகஹகொடை பிரதேசத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட் 6 பேர் உயிரிழந்துள்ளார்கள். மேலும் 10 பேருக்கு புற்று நோய் தொற்றியிருப்பதாக அறியப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்ற வகையில் அப்பிரதேசத்தில் செயற்படும் டீ.எஸ்.ஐ தொழிற்சாலை மீது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அங்கு இறப்பர் எரிக்கப்படுவதால் அதிலிருந்து வெளியாகும் விஷ இரசாயனம் கலந்த புகைதான் புற்று நோய்க்குக் காரணமென பிரதேச மக்கள் நம்புகின்றனர். அதனால் கிராம மக்கள் போகஹகொட சுகாதார மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் குழுவை அமைத்துள்ளனர். அக்குழுவின் செயற்பாட்டாளரான நோபட் சில்வா என்பவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யப்பட்ட அன்றே ஆயுதம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இன்னொரு இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரத்துபஸ்வலையில் அரசாங்கம் பின்நடவடிக்கையையே கையாண்டது. மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக வீதியில் இறங்கியபோது அவர்களை அடக்குவதற்கு அரசாங்கம் முன் நடவடிக்கை எடுத்தது. அதன்படி நோபட் என்பவரின் வீட்டிற்குள் ஆயுதத்தைப் போட்டுவிட்டு அவரைக் கைது செய்தார்கள்.

அவரைக் கைது செய்த பொலிசார் ஆயுதத்தைப் பற்றி எந்தக் கேள்வியையும் கேட்காமல், டீ.எஸ்.ஐ. தொழிற்சாலைக்கு எதிராக நடக்கும் போராட்டத்தின் பின்னணியில் இருப்பது யார், பின்னணியில் இருக்கும் அரசியல் கட்சி எது என்பன போன்ற கேள்விகளையே கேட்டுள்ளனர்.

இதற்கிடையில் கொடையகனே தெதுருஓய ஆற்றுக்கு இரசாயனக் கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைக்கு எதிராக

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# வெளியுலகத் தொடர்பின்றி காட்டுக்குள் முடக்கப்பட்டுள்ள மக்கள்

”நாம் கடந்த எட்டு ஆண்டுகளாக காட்டுக்குள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். பட்டப்பகலில் நடந்து செல்வதற்குக் கூட பயமாக இருக்கிறது. எந்தக் குற்றமும் செய்யாமல் திறந்த வெளியில் சிறைப் படுத்தப்பட்டது போலத்தான் எங்களது வாழ்க்கை” - இது களுத்துறை மாவட்டத்தில் அரம்பஹேனவில் வசிக்கும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் சோகக்குரல்.

ஹொரணை பெருந்தோட்டக் கம்பனியின் ஹில்ஸ்ட்ரீம் தோட்டத்தின் ஒரு பிரிவே அரம்பஹேன. இப்பகுதியில் அடர்ந்த காடுகளுடன் கூடிய சிறு மலைக்குன்றுகளுக்கிடையே அமைந்திருக்கிறது லயன் குடியிருப்பு. அங்கு 14 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் வசித்து வருகிறார்கள். இக்குடும்பங்கள் 1924-ம் ஆண்டிலிருந்து பரம்பரை-பரம்பரையாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வாழ்ந்துவரும் காலம் முதல் இத்தோட்டக் கம்பனி நல்ல இலாபத்துடனேயே இயங்கி வந்தது.

வளமான தோட்டமாக இருந்த அரம்பஹேன நிர்வாகத்தின் கவனயீனம் காரணமாக காடாகிப் போனது. அந்தத் தோட்டம் 165 ஹெக்டெயர் நிலப்பரப்பை கொண்டது. இறப்பர் மரங்கள் மீள்நடுகை செய்யப்படாத காரணத்தினால் தோட்டம் முழுவதும் காடாகிப் போயுள்ளது. இதனால் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாதாக்கப்பட்டுள்ளதுடன்,. தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் தரப்படவில்லை. மேலும் இதர வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லை. இந்நிலையில் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட அந்த மக்கள் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கூலித் தொழில் செய்து வருகின்றனர்.கிடைக்கும் வருமானங்களில் கால்வயிறு அரைவயிறு என்றுதான் சாப்பிட்டு வாழ்கின்றார்கள்.

ஆங்காங்கே காணப்படும் இறப்பர் மரங்களுக்கு நடுவே மனிதர்கள் உள்ளே போக முடியாதளவுக்கு உயர்வான காட்டு மரங்களும் செடிகொடிகளும் நிறைந்திருக்கும் அரம்ஹேனவில் தனித்துவிடப்பட்டுள்ள இந்த மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை வைத்தியசாலை இல்லை மலசலகூடங்கள் இல்லை தண்ணீரைக் கூட காத தூரத்தில்

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# தேர்தலுக்குள் மறைந்த பனிப்போர்

இலங்கையின் ஊடக தொலைதொடர்பு முக்கியமான இடத்துக்கு வந்துள்ளது. தொலைக்காட்சி, வானொலி, செய்திப் பத்திரிகைகள், கையடக்க மற்றும் ஏனைய தொலைபேசி வசதிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒவ்வொரு விடயத்திலும் நல்லது கெட்டது இருப்பது போன்று இந்தத் துறையிலும் இரு பக்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தத்தமது கண்ணோட்டத்திலேயே அவற்றை கையாள்கின்றனர். அதற்கான விளக்கமுமளிக்கின்றனர். பொதுவாக அரசியற்கட்சிகளும் இந்தக் கைங்கரியத்தில ஈடுபடுகின்றனர். ஆனால், அந்தக் கட்சிகளின் நல்லவைகளாகவும், கெட்டவைகளாகவும் அறிந்துக் கொள்ளப்டும விடயங்களின் அடிப்படையாக இருப்பது. வர்க்க அரசியலாகும். சில கட்சிகள் நேரடியாகவே தமது வர்க்க அரசியலில் ஈடுபடுகின்றன. அல்லது வேறு விதமாக தோற்றி நிற்கும் முதலாளித்துவ அரசியலுக்கு மறைமுகமாக ஆதரவளிக்கின்றனர். வஞ்சக ஒத்துழைப்பிற்குள் வெளித் தோற்றத்தில் பல்வேறு கட்சிகளாகச் செயற்பட்டாலும், கொள்கையிலும் செயற்பாட்டிலும் ஒரே நோக்கத்திற்காகவே செயற்படுகின்றன. நிலைத்திருக்கின்றன. தமது நோக்கத்திற்காக தொலைதொடர்ப்பு சாதனங்களை உயர்மட்டத்தில் பயன்படுத்திக் கொள்கின்றன. தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு, சுரண்டலுக்கு, அழுத்தத்திற்கு எதிரான மக்களை வேறு பக்கம் திருப்பி தமக்கெதிராகக் கிளம்பும் எதிர்ப்புகளை கட்டுப்படுத்துவதற்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் முடிந்தவரை தொலைதொர்பு சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதுமாத்திரமல்ல, போர்க்குணம் கொண்ட சக்திகளை அடக்குவதற்கு, சிறைப்படுத்துவதற்கு, மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து மற்றும் அந்த காட்டுமிராண்டிதனத்தை நியாயப்படுத்துவதற்கு முயலுதல் போன்றவற்றிற்காக தொலை தொடர்ப்புச் சாதனங்களை நன்றாக பயன்படுத்துகின்றன. இதற்கான உதாரணங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இந்த நிலைமையை தொழிலாளர் வர்க்கம் புரிந்து கொள்ள வேண்டும் விஷேடமாக ஒவ்வொரு ஊடக நிறுவனத்திலும், ஒவ்வொரு அரசியல் கட்சியிலும், ஒவ்வொரு வர்க்க அரசியல் மற்றும் வர்க்கக் கருத்தொன்று நிலவுகிறது. தொலை தொடர்பு ஊடகங்களிலும் நடக்கும் இந்த அடிவருடித்தனத்தை புரிந்துக் கொண்டாலே அது வெற்றியாக இருக்கும். ஏனெனில் அது அலங்கரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.



> மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து மற்றும் அந்த காட்டுமிராண்டித்தனத்தை நியாயப்படுத்துவதற்கு முயலுதல் போன்றவற்றிற்காக தொலை தொடர்புச் சாதனங்களை நன்றாக பயன்படுத்துகின்றன.

இனவாதத்தை விதைத்தல் அல்லது மாகாண சபைத் தேர்தல்

வடக்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான தேர்தல்கள் முடிந்துவிட்டன. ஏனைய மாகாண சபை தேர்தல்களுக்காக அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கின்றது. அதை ஒருபுறம் வைத்துவிட்டு நடந்து முடிந்த தேர்தல்களைப் பற்றி சற்று அலசுவது முக்கியமாகும். உறுப்பினர்களின் எண்ணிக்கையையோ அல்லது விருப்பு வாக்குகள் குறித்தோ அறிந்துக் கொள்வதற்காக அல்ல.ஆனால் நாடு என்ற வகையிலும், சமூகம் என்ற வகையிலும், மனிதர்களாக நாம் அடியெடுத்து வைத்திருக்கும் அரசியலைப் பற்றி அறிந்துக் கொள்வது இன்றியமையாததாகும். வடக்கு, மத்திய மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் இனவாதத்தையே கக்கின. சிங்கள மற்றும் தமிழ் இனவாதம் கக்கப்பட்டது. சிறு சிறு மாற்றங்களுடன் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அரசாங்கமும் இந்த ஈனச் செயலில் ஈடுபட்டன. இடதுசாரி என்று கூறிக் கொள்ளும் முதலாளித்துவ வர்க்கத்தோடு ஒட்டி உறவாடும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட பார்வைக்கு "இடதுசாரிகளான" இவரகள் இந்த செயற்பாட்டிலேயே மூழ்கியிருந்தனர்.

"வர்க்கத்தின் ஒற்றுமை" என்பது இந்த இடதுசாரிகளுக்கு கேலிக் கூத்தாகும். அதற்கான உபாயங்கள் அவர்களுக்குப் பொருந்தாது. இனவாதத்தின் பின்னால் சென்ற இடதுசாரி அரசியல் வழக்காறுகள் லெனின் ஒருமுறை கூறியதைப் போன்று " இடதுசாரிகள் என்ற வகையில் தோற்றி நிற்கும் இயக்கத்திற்குள் இருப்பது உண்மையிலேயே முதலாளித்துவ அரசியல் இயக்கங்களாகும்" அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் பதத்திற்கு ஏற்றவாறு தாளம் போடுபவர்களே அல்லாது வேறொன்றும் செய்யப்போவதில்லை. தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக இனவாதத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் ஒன்றாகவே செயற்படுகின்றனர். தொழில்களைப் பெற்றுக் கொடுத்து ஏமாற்றுத் திட்டங்களின் மூலம் முதலாளித்துவ அரசாங்கம் தேர்தலுக்குத் தயாராகி வருகிறது. தேர்தல் நடக்கவிருக்கும் மாகாணங்கள் ஊடாக மோட்டார் சைக்கிள் சவாரியின் மூலம் மேற்கொள்ளப்படும் தேர்தலுக்கு தயாராவதுதான்.

வடக்கு மாகாண சபை தேர்தல ஊடாக வடக்கில் துன்பப்படும் மக்களின் நோக்கம் நிறைவேறுமா, இல்லை. அது இன்னொரு வெள்ளை யானையே அல்லாது வேறொன்றுமல்ல. முதலாளித்துவத்திற்காக ஆலவட்டம் வீசும் தமிழ் பிரதிநிதிகளுக்கு இன்னொரு சந்தர்ப்பமாக வட மாகாணசபை அமைக்கப்பட்டிருக்கின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்கள் *CIA* மற்றும் "ரோ" உளவுச் சேவைகளின் தயவால் வல்லாதிக்கவாதிகளுக்காக சேவை செய்ய மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? எப்படியிருந்தாலும் யுத்தம் காரணமாக வடக்கிற்கு இழுத்துக் கொள்ள முடியாதிருந்த மூலதனத்தை இழுத்துக் கொள்வதற்கான அடிப்படை வசதிகள் செய்யப்படக் கூடும். ஊடகங்களின் மூலமாக அவற்றைப் பெருப்பித்துக் காட்டி அபிவிருத்தி என்ற போர்வையில் சித்து விளையாட்டுக்கள் நடக்கப்போவது என்னவோ உறுதி. அது மாத்திரமா? நாட்டின் ஏனைய பகுதிகளில் மதவாதத்தையும் இனவாதத்தையும சூட்சுமமாக பரவலாக்கி முதலாளித்துவ ஆட்சியினால் இலங்கைச் சமூகம் காரிருளுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. வட மாகாண சபை அமைக்கப்பட்ட கையோடு சகோதர தமிழ் மக்கள் மத்தியில் இந்த நிலைமையை மேலும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தடுக்க முடியாது.

கலைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் மேல் மாகாண சபை உள்ளிட்ட நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் பொது பல சேனையின் நடவடிக்கைகள் பரவலாகிக் கொண்டிருக்கின்றன. இனவாதிகளாக்கப்பட்ட சமூகத்தை மதவாதிகளாக்குவதே இதன் நோக்கமாக இருக்கின்றது. ஒரு சமூகத்திற்குள் இனவாத அல்லது மதவாத அடிப்படையில் பல்வேறு அமைப்புகள் செயற்படும்போது, அது முதலாளித்துவத்திற்கே சேவையாற்றுகிறதேயன்றி துன்பப்படும் மக்களுக்காக சேவையாற்றுவதில்லை.

வரவு- செலவு திட்டத்துடனான போராட்டம்

பாட்டாளி வர்க்கத்தின் பிரிவுகள் போராட்டத்திற்குள் நுழைவது வரவேற்கத் தக்கதாகும். ஆனால், முதலாளித்துவ வர்க்கத்தின் உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக போராட்டத்திற்காக உழைக்கும் மக்கள் தூண்டப்படுவார்களாயின் அது பாரதூரமான அரசியல தவறாகும். வரவு செலவுத் திட்டத்தை இலக்காக வைத்து 21 கோரிக்கைகளின் இயக்கம் என்ற ரீதியில் சில தொழிற்சங்க அமைப்புகள் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றன. தொழிற் சங்கங்களை ஒன்றிணைக்கும் போராடடத்தை நடத்தத்தான் வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்குமாறு அல்லது நிவாரணம் பெற்றுத் தருமாறு போராட வேண்டுமென ஒரு வாதத்தை முன்வைக்கவும் முடியும். ஒரே பார்வைக்கு அது நியாயமானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் தெரியக் கூடும். ஏனெனில், வரவு- செலவுத் திட்டம் என்பது அடுத்த வருட நிதி முகாமைத்துவத்திற்கான கருவி என்பதனாலேயேயாகும். அது தான் வெகுஜனங்களின் கருத்து. ஆனால், நவதாராளமய முதலாளித்துவ அரசாங்கங்கள் இலங்கையில் மாத்திரமல்ல உலகம் முழுவதும் ஒரு பாரம்பரியமாகவே வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கின்றன. வரவு செலவுத் திட்ட விவாத அரங்காக இருக்குமேயல்லாது வேறொன்றும் நடக்கப்போவதில்லை. வரவு செலவு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் நிதி நிர்வாகம் முதலாளித்துவ அரசாங்கங்களினாலேயே கேலிக் கூத்தாக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய நேரத்தில், விருப்பமான திட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக திறைசேரியோடு பேச்சுவார்த்தை நடத்தி தமக்குத் தேவையான பணத்தை ஒதுக்கிக் கொள்ள முடிவது அதனால்தான். தொழிலாளர்கள் ஒன்று சேர்வதாயிருந்தால், உறுதியான நோக்கத்தோடு போராடுவதாயிருந்தால் வெற்றியை நெருங்க முடியும். அது சம்பளம் மற்றும் வரப்பிரசாதங்களுக்கான போராட்டமாக இருந்தால் அதற்கு வரவு செலவுத் திட்ட காலம் சம்பந்தப்படாது. அது "போராட்டம் என்ற போர்வையில் தொழிலாளர் வர்க்க இயக்கத்தை ஏமாற்றும் முதலாளித்துவப் பிரதிநிதிகளைச் சார்ந்ததாகும்.

தேர்தல் வரும் (2014)

2014ல் சில தேர்தல்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதற்காக அரசாங்கத்தின் சமிக்ஞைகள் இப்போதே தெரிய ஆரம்பித்துள்ளன. ஆதலால் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக சில நிவாரண வித்தைகளை காட்டக் கூடும். அதற்காக மெகா திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொதுநலவாய அரசத் தலைவர்களின் மாநாடும் அதற்கான ஏலத்திற்கு தயாராகவே இருக்கின்றது. ஜனநாயகத்திற்கு எதிரான அனைத்து செயல்களையும் நியாயப்படுத்துவதற்கான அனைத்தும் பயன்படுத்தப்படவிருக்கின்றன. அது அரசாங்கத்தின் அரசியலாகும். எப்படியிருந்தாலும், முதலாளித்துவத்தின் உப்பவைக்கும் அபிவிருத்திக்கு தொடர் வட்டியுடனான கடனைச் செலுத்த வேண்டியது வரி செலுத்தும் மக்கள்தான். வரி செலுத்தும் உழைக்கும் மக்கள் இந்தக் களியாட்டத்தின் வர்க்கக் கருத்தை அறிந்துக் கொள்ளாத வரை அது செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

# நீங்கள் மரணிக்கவில்லை...

1977 பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஜே.ஆர். ஜயவர்தன, இலங்கையின் அரசியல் சாஸனத்தை தனக்கு வேண்டியவாறு மாற்றி நவ தாராளமயத்தின் கோரப்பிடிக்குள் இந்நாட்டை இட்டுச் சென்றார். அன்றைய ஜயவர்தனாவின் அரசாங்கம் இந்நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு வேட்டு வைத்ததோடு மட்டுமல்லாது தட்டிக் கேட்டவர்களையும் இரும்புக் கரம் கொண்டு அடக்கியது. அவருடைய சர்வாதிகாரத்திற்கும், அடக்குமுறைக்கும், அடாவடித்தனத்திற்கும் எதிராக அன்றைய முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்கள் போராட்டக் களத்தில் குதித்தனர். இளைஞர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் தாக்குப்பிடிக்க தைரியமில்லாத ஜயவர்தனா 1988ல் மோசடியான ஜனாதிபதித் தேர்தலின் மூலம் பிரேமதாசவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிரேமதாச ஜயவர்தனாவின் நவ தாராளமய முதலாளித்துவப் போக்கையே கடைபிடித்தார். ஜே.ஆரின் சர்வாதிகாரத்திற்கெதிராக, நவ தாராளமய கொள்ளைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பிரேமதாசவின் சர்வாதிகாரத்தின் கீழும் தொடர்ந்தது. நாளுக்கு நாள் உக்கிரமடைந்துவந்த தேசாபிமானிகளின் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து, தனது ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோவெனப் பயந்த அவர் இராணுவத்தையும், ஆயுதம் தரித்த காடையர்களையும் கொண்டு மூர்க்கத்தனமான முறையில் அந்தப் போராட்டத்தை அடக்கினார். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார்கள். நாடே சுடுகாடாக மாறியது.

அன்று நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்த ஆயிரக்கணக்காண தேசாபிமானிகளின் தியாகங்களை நினைவு கூர்வதற்காக டிசம்பர் 13ம் திகதி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் கார்த்திகை வீரர் ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிகழ்வுகளில் ஆற்றப்பட்ட உரைகளில் சில....

இன்று, இலங்கையில் பெரும்பாலானோரிடம் இல்லாத பதில் அன்று கார்த்திகை வீரர்களிடம் இருந்தது சேனாதீர குணதிலக

நவதாராளமய முதலாளித்துவத்தின் முன்னால் அடிபணிவதா? போராடுவதா? என்ற கேள்வியின் முன்னால் இன்று பெரும்பாலானோரிடம் இல்லாத "ஆம், நாங்கள் போராடுவோம்" என்ற பதில் அன்று 88-89 போராளிகளிடம் இருந்ததாகவும், எவ்வளவுதான் குறைபாடுகள் காணப்பட்டாலும், அந்த தீரமிகு எழுச்சி இலங்கை அரசியலில் ஆயிரமாயிரம் திருப்புமுனைகளை ஏற்படுத்தியதாக முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சேனாதீர குணதிலக கூறினார். கேகாலையில் 2013.11.13ம் திகதி நடைபெற்ற 24வது காரத்திகை வீரர்கள் ஞபகார்த்த நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

"மனித வரலாற்றில் எமக்கு ஒவ்வொரு தினங்கள் கிடைக்கின்றன. நவம்பர் 13 என்பதும் அவ்வாறான ஒரு தினம்தான். அன்று தோழர் கொல்லப்பட்ட தினம் என்று சொல்கிறார்கள். அதில் உண்மையும் இருக்கிறது. ஆனால், அதோடு 60000 உயிர்களைத் தியாகம் செய்த வரலாறும் இருக்கின்றது. அந்த வரலாற்றை நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். 1871 மார்ச் 18ம் திகதி பாரிஸ் கம்யூனின் அனுபவங்கள், 1917 அக்டோபர் 17 ருஸிய அனுபவங்கள் போன்றவற்றோடு மேற்கொள்ளப்பட்ட மனித வரலாற்றின் பயணம். அத்தியாயமொன்று எழுதப்பட்டிருக்கின்றது. அப்படியான ஒரு தினம் தான் நவம்பர் 13 என்பது.

இறந்தவர்களின் உடல் மீது பயணிக்க எத்தனிக்கும் இயக்கங்கள் உலகில் இருக்கின்றன. இலங்கை சமூகத்திலும் எங்களுக்குக் கிடைக்கின்றன. ஆனால் இங்கு நாங்கள் இறந்தவர்களை உயிர்ப்பிக்க முயற்சிக்கவில்லை. அவர்களை மறந்துவிட்டு எதிர்காலத்தைப் பற்றி பேச முடியாது. கம்யூனிஸ அறிக்கையில் இருக்கிறது மனித வரலாறு என்பது போராட்டங்களின் வரலாறு என்று வர்க்கங்களாகப் பிரிந்த மனித சமூகத்தின் வரலாற்றிலிருந்தே ஒடுக்கப்படுவருக்கு எதிராக ஒடுக்கப்பட்டவரின் போராட்டம் காணப்பட்டது. ஸ்பாடகஸ் போன்றவர்கள் எஜமானர்களின் அழுத்தத்திற்கு எதிராகப் போராடினார்கள். அந்தப் பாரம்பரியத்தை மனித சமூகம் முன்னோக்கி எடுத்து வந்துள்ளது. அந்தப் போராளியின் வரலாற்றில் ஒரு சந்தர்ப்பம்தான் 87-89 என்பது.

அந்த கருத்தாடல் எமக்கு மத்தியில் நிலவியபோதும் சமூகத்தில் அப்படியான கருத்தாடலொன்று சமூகத்தி நிலவவில்லை. இந்த கருத்தாடலை சமூகத்திடம் எடுத்துச் செல்வது எவ்வாறு என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். அந்தப் பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. எந்தப் பின்னடைவும் இல்லாது இந்தப் போராட்டம் நடந்தேறியதாக எண்ணக் கூடும். அப்படியல்ல. முதலாளித்துவம் வேண்டாமென்ற நல்லதொரு சமுதாயத்திற்கான போராட்டம் அங்கே இருந்தது. அவர்கள் ஏன் போராடினார்கள்? 1977ல் தார்மீக சமுதாயமொன்றுக்காக என்ற சின்னத்தோடு நவ தாராளமய முதலாளித்துவம் அரங்கேற்றப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதன் ஒரு அனுபவம்தான் 1980ல் நடந்த வேலை நிறுத்தம். இந்த போராட்டத்தின் பின்புலத்தில் இருந்த ஒரு செய்திதான் நவ தாராளமயத்தினால் தொழிலாளர் மீது தொடுக்கப்பட்ட அழுத்தம். நவ தாராளமயத்தை எப்படியாவது சுமத்த வேண்டுமென்று ஆட்சியாளர்கள் உறுதிபூண்டிருந்தார்கள். ஆகவே 80 வேலை நிறுத்தம் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டது.

அன்றைய முதலாளித்துவ அரசில் கட்சிகளுக்கும் அதே நிலை ஏற்பட்டது. சிறிமாவோ பண்டாரநாயகாவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு முதலாளித்துவ அரசியல் கட்சிகள் பலவீனமாக்கப்பட்டன. மாணவர் இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் அடக்கப்பட்டன. வடக்கின் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தேர்தல் வரைபடம் 10 வருடங்களுக்கு சுருட்டி வைக்கப்பட்டது. தேர்தல் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடிவைத் தேடித்தரும் முறையல்ல. என்றாலும் அவ்வாறான முதலாளித்துவ உரிமைகள்கூட ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டன. இதன் ஒரு வெளிப்பாடுதான் 83 கறுப்பு ஜூலை. இடதுசாரிய அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டன. பாரிய அடக்குமுறை செயற்பாட்டோடுதான் நவ தாராளமயம் கொண்டுவரப்பட்டது.

இப்போதுகூட நாங்கள் ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டியுள்ளது. அந்த 60000 பேரும் தமக்குள்ளேயே கேட்டுக் கொண்ட கேள்வியும் அதுதான். இந்த நவ தாராளமய முதலாளித்துவத்தின் காலடியில் வீழ்வதா? இல்லை போராடுவதா? என்பதுதான்".

கார்த்திகை வீரர்கள் ஒரு கனவுக்காகவே போராடினார்கள்.

அந்தக் கனவு அழிந்துவிடவில்லை. அந்தக் கனவோடு ஆயிரமாயிம்பேர் சேரும்போது அந்தக் கனவு உண்மையாகிவிடுமென முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் குறிப்பிட்டார்.

காலி, மஹஜதண்டேகம சனசமூக நிலையத்தில் நடைபெற்ற முன்னிலை சோஷலிஸக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கார்த்திகை வீரர் ஞாபகார்த்த நிகழ்வின்போது உரையாற்றிய முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் புபுது ஜயகொட மேற்கண்டவாறு கூறினார்.

" 80 களின் இறுதிக் கட்டத்தில் நடந்த போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த தோழர்களை இன்று நாம் நினைவு கூர்கிறோம். அவர்களது அந்த தீரமிகு போராட்டம் அரசாங்கத்தல் மிலேச்சத்தனமாக அடக்கப்பட்டது. போராட்டம் தோல்வியடைந்தாலும். அந்தப் போராளிகளின் கனவு, அவர்களது நோக்கம் தோல்வியடையவில்லை. "நீதியான சமுதாயம்- நியாயமான நாடு- அடிமையற்ற மனிதன்- இதுதான் எங்களது எதிர்ப்பார்ப்பு" என்றே அவர்கள் சுவர்களில் எழுதினார்கள். போராட்டம் தோல்வியடைந்தாலும், அந்தக் கோஷங்கள் காலாவதியாகிடவில்லை. அப்படியான உலகைப் பற்றிய கனவும் காலாவதியாகிடவில்லை. அவர்கள் நீதியான சமூகத்தைப் பற்றிக் கூறினர்கள். அப்படிக் கூறியவர்களை ஆட்சியாளர்கள் கொன்றொழித்தார்கள். ஆனால் நீதிமிக்க சமுதாயமொன்றைப் பற்றிய எதிர்பார்ப்பு என்றுமில்லாதவாறு இன்று வலுப்பெற்றிருக்கின்றது. அவர்கள் நீதிமிக்க தேசத்தைப் பற்றி கனவு கண்டார்கள். அவர்களை கொன்றொழித்தார்கள். ஆனால், இன்று அந்தக் கனவு நனவாகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் சுதந்திர மனிதனை எதிர்பார்த்தார்கள். அவர்களைக் கொன்றொழித்தார்கள். ஆனால், இன்று பிறக்கும் ஒவ்வொரு பரம்பரையும் சுதந்திரத்திற்காகப் போராடுகின்றன.

ஒருபுறம் கார்த்திகை வீரர்கள் நல்லதோர் உலகைக் குறித்த நம்பிக்கையையே அவர்கள் பிரதிநிதித்துவம் செய்தார்கள். அவர்கள் கொல்லப்பட்ட போதிலும் புதிய பரம்பரையில் அவர்கள் மீண்டும் மீண்டும்

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)











மார்க்சியம் - 07




# மனித உழைப்புத்தான் அறிவின் சாரம்

> மனித உழைப்புக்கு வெளியில் அறிவும், மனித சமூகத்துக்கு வெளியில் தனிமனித வாழ்வும் உண்டு என்று நம்பும் மனநிலையை இது உருவாக்குகின்றது.





மனித அறிவு என்பது அறியாமையில் இருந்து அறிவை நோக்கிய வளர்ச்சியாகும். அதாவது வரலாற்றுபூர்வமாகவே உழைப்பு பற்றிய அறியாமையில் இருந்து, உழைப்பின் வளர்ச்சிக்கு ஏற்ப அறிவு வளர்ந்து வருகின்றது. இதுதான் மனித அறிவின் எதார்த்தம். மனித உழைப்பு என்ற ஒரு நடைமுறைக்கு வெளியில், அறிவு சுயாதீனமாக இருக்கவும் முடியாது, தோன்றவும் முடியாது.உழைப்புதான் மனிதஅறிவின் அடிப்படையும் ஆதாரமுமாகும்.

நடைமுறையை மறுத்து அறிவைக் கொண்டு பிழைக்கும் ”அறிவாளிகள்” சமூக அடிப்படையைக் கொண்டு, மனித உழைப்புக்கு வெளியில் மனித அறிவு தோன்றுவதாக நம்புகின்ற பொழுது சமூக அறியாமை தோன்றுகின்றது. இது நிலவும் தனிவுடமை அமைப்பு சார்ந்த அறிவாக, சமூக உள்ளடக்கமாக மாறி விடுகின்றது. உழைப்பில் இருந்து பிரிந்த” அறிவாளியின்” சொந்த வாழ்வு முறைக்கு ஏற்றால் போல், அறிவு பற்றிய அறியாமையே அறிவாக கொள்ளப்படுகின்றது.

”உழைப்பே மனிதனையே சிருஸ்டித்தது” என்றார் எங்கெல்ஸ். மனிதனின் அனைத்தும் தளுவிய உள்ளடக்கமும் இது தான். உழைப்பு பற்றிய மனிதசாரமே, மனித அறிவாகும். அறிவு மனித கற்பனையில் பிறப்பதில்லை.

மனிதனின் கூட்டு உழைப்பு சார்ந்த அறிவுக்கு பதில், பிறர் உழைப்பைத் திருடிய தனிவுடமையில் அறிவு பிரிகின்றபோது, அறிவு கூட பிறர் உழைப்பில் இருந்துதான் திருடப்படுகின்றது. அதாவது உடல் உழைப்பில் இருந்து சிந்தனை உழைப்பு பிரிந்தபோது, புதிய கண்டுபிடிப்புகள் வளர்ச்சியுற்றது. உழைப்பில் இருந்து அறிவை பிரித்து திருடுவதன் மூலம் அறிவு கிடைக்கின்றது. அதாவது பிறர் உழைப்பை திருடுவதால் உழையாதவன் கையில் செல்வம் குவிவது எப்படியோ, அப்படித்தான் அறிவும் மனித உழைப்பில் இருந்து பிரித்து திருடப்படுகின்றது.

உழைப்பே மனிதனை முன்னிறுத்துகின்றது. உழைப்பு நின்றுபோனால், மனித உயிரினமே அழிந்துபோகும். மனித உழைப்புக்கு வெளியில் அறிவு என்ற ஓன்று கிடையாது. உழைப்பு என்னும் மனித செயற்பாடுதான், அறிவை பரிசோதிக்கும் ஒரேயொரு வாழ்வியல் சார்ந்த நடைமுறையுமாகும்.

நடைமுறையை மறுக்கும் ”தத்துவவாதிகள்” போல், ”கோட்பாட்டுவாதிகள்” போல், உழைப்பில் ஈடுபடும் மக்கள் தனது வாழ்வு சார்ந்த அறிவை குறுக்கிவிடுவதில்லை. இதனால் தான் வாழ்வு சார்ந்த நடைமுறையிலான எதார்த்த முரண்பாடுகள், வர்க்கம் சார்ந்த முரண்பாடுகளாக மாறுகின்றது. உழைப்பு சார்ந்த எதார்த்தம், அதைச் சாராத வாழ்க்கைக்கும் எதிரான போராட்டத்தில் இரு வேறு அறிவாக உருவாகின்றது. அறிவு என்பது நடைமுறையில் தான் உருவாகின்றது. மனித உழைப்பு என்னும் செயற்பாட்டில் தான் அதை பரிசோதிக்க முடியுமே ஒழிய ”மனம்” என்ற மனித கற்பனையில் அல்ல. முன்னைய வாழ்வு சார்ந்து மனித மனம் சார்ந்த சிந்தனைகள், மனிதசெயல்கள் மூலமே பரிசோதிக்கப்பட்டு உறுதி செய்யப்படும்போது அது மனிதனின் புதிய அறிவாகின்றது.

இந்த அடிப்படை உண்மையை மறுத்தல் மூலமே, இதை பிரிப்பதன் மூலம், மனிதனை மனிதன் அடிமை கொள்கின்ற இன்றைய சமூக அமைப்பு முன்னிறுத்தப்படுகின்றது. இது மனித அறிவையும், மனித உழைப்பையும் பிரித்து விடுகின்றது. ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றதாக விளக்கி, அடிப்படையற்ற கற்பனைகள் மனிதன் பற்றிய அறிவாக்கப்படுகின்றது. இந்தப் பிரிவு மூலம் மனித உழைப்பை உழைப்பில் ஈடுபடாதவன் சுரண்டுவது என்ற அடிப்படை அறிவுக்கு இது இட்டுச் செல்லுகின்றது.

இதன் சாரம் கூட்டான மனிதனின் சமூகச் செயற்பாடு இன்றி, தனிமனிதன் தனித்து இந்த பூமியில் வாழ்ந்துவிட முடியும் என்ற பிரமையையும் நம்பிக்கையையும் உருவாக்கி விடுகின்றது. தனிவுடமைவாத சிந்தனையிலான மனித கற்பனையை முன்னிறுத்திய, தன்னிலைவாதத்தையே அறிவாக இது குறுக்கிவிடுகின்றது.

மனித உழைப்புக்கு வெளியில் அறிவும், மனித சமூகத்துக்கு வெளியில் தனிமனித வாழ்வும் உண்டு என்று நம்பும் மனநிலையை இது உருவாக்குகின்றது. இப்படி உருவாகின்ற மனித கண்ணோட்டங்களும், செயற்பாடுகளும் பொய்மையில் வாழ்வதையே உண்மை வாழ்வாக முன்னிறுத்துகின்றது.

சமூக உணர்வு கொண்ட மனிதனாக வாழ்வதை மறுதளித்துவிடுகின்றது. சமூக உணர்வு கடந்த தனிமனித சிந்தனையும், அறிவும் மனிதனுக்குரிய அறிவாக இருப்பதில்லை. மாறாக தனக்குரிய, தன் இருப்புக்குரிய, தன் சுயநலம் சார்ந்த குறுகிய வக்கிர அறிவாகமாறுகின்றது. தன்னை மையப்படுத்திய அறிவாக பீற்றிக் கொள்கின்றது.

எங்கெல்ஸ் கூறினார் ”அதிக சமூக உணர்வு கொண்ட மனிதனின் தோற்றத்தைச் சமூக உணர்வில்லாத மிக சமீபத்திய மூதாதையரிடையே தேடுவது சாத்தியமில்லை” என்றார். சமூக உணர்வையும், அது சார்ந்த அறிவையும் இன்றைய மனிதனிடம் இயல்பாக காண முடியாது.ச மூகத்துக்கு முரணான, தன்னை முன்னிறுத்திய அறிவாக குறுக்கிவிட்டது. இயல்பாகவே மனிதன் சமூகக் கூறுகளை மறுதளித்துவிட்ட மனித வக்கிரம் தான், இன்றைய பொது அறிவாக எதார்த்தத்தில் பிரதிபலிக்கின்றது. உழைப்பைக் கேவலமாக்கி, அதை தனக்காக உழைக்கும் அடிமையினதும் தனக்கு கீழ்ப்பட்டவனினதும் வாழ்வியல் நடைமுறையாக கருதும் சமூக உணர்வற்ற மனித நடத்தையாக உழைப்பு மாற்றப்பட்டு இருக்கின்றது. இது தான் இன்றைய தனிவுடமை அமைப்பின் மனித சாரமாக்கப்பட்டு இருக்கின்றது.

மனித தோற்றத்தில் மனிதனின் உயர்வான சமூக உணர்வாக்கம் தான், மிருகத்தில் இருந்தும் மனிதனைப் பிரித்தது. அதுதான் மனிதனின் கூட்டு உழைப்பும் கூட்டு வாழ்வும். இன்றைய சமூக உணர்வாக்கமல்லாத எந்தக் கூறும், மிருகத்தன்மை கொண்டதே ஒழிய, அது மனிதத் தன்மை கொண்டதல்ல. அதாவது சமூக உணர்வாக்கமல்லாத எந்த அறிவும்,மனிதத் தன்மை கொண்ட உண்மை அறிவல்ல. மனிதனின் சமூக உணர்வாக்கமே, இயற்கையின் விதியுமாகும். இன்றைய சமூக உணர்வாக்கமல்லாத அறிவு முதல், செயற்பாடுகள் அனைத்தும் மனிதனுக்கு எதிரானது. மனிதனை மனிதன் எதிரியாக்கி வைத்திருக்கும் சிந்தனைகள், செயல்கள் அனைத்தும் மனித அறிவின் பாலானதல்ல. மிருகத்தனத்தின் பாலானது. மனிதனை மனித உழைப்பில் இருந்து பிரிந்த, பிரித்து வைத்திருக்கின்ற அறிவாகின்றது. உழைப்பில் இருந்து அறிவையே பிரித்துவிடுகின்ற அறிவுச் செயல்.

இதை அறிவு என்று கூறிக்கொண்டு, தன்னைத்தான் ஏமாற்றிக் கொள்கின்ற பொய்மையை உண்மையாக காட்டி அறிவை திரிக்கின்றது. சமூக உணர்வுள்ள மனிதன் எப்படி சமூக உணர்வற்றவனாக வாழ்கின்றான் என்ற உண்மையை உணரவும், உணர்த்தவும் விரும்பாத எல்லைக்குள், மனிதஅறிவு ஊனமாக்கப்பட்டு இருக்கின்றது. மனிதனை மனிதன் ஒடுக்கியும், சுரண்டியும் வாழ்கின்றதால், தனக்கு கிடைக்கும் வாழ்வை மனித வாழ்வாக அறிவாக காட்டுகின்றனர். இந்த வாழ்வை மேன்மையானதாகவும், தன் அறிவால் அறிவுத் திறமையால் இது கிடைப்பதாக கூறுகின்ற பொய்யான அறிவியல் தர்க்கமாக அறிவு கட்டமைக்கப்படுகின்றது. மனித உழைப்புதான், மனித வாழ்வின் அனைத்தும் என்ற உண்மையை மறுதளித்துவிடுகின்றது.

இன்று ”சொர்க்கம்” என்று கருதும் எந்த மனித வாழ்வு சார்ந்தசெயற்பாடுகளுக்கு பின்னும், மனித உழைப்பே ஒழிந்து இருக்கின்றது. அந்த உழைப்பு சுரண்டப்பட்டு, அதை தங்கள் சொத்தாக முன்னிறுத்தி” சொர்க்கமாக்கப்பட்டு” காட்டப்படுகின்றது. இது மனித உழைப்புக்கு வெளியில் சுயாதீனமாக இந்த ”சொர்க்கம்” இருப்பதாக கட்டமைக்கும் பொது அறிவும், அது தனது தனித்துவமான தனிவுரிமை என்றும், அதில் தலையிட சமூகத்துக்கு உரிமையில்லை என்று கூறுமளவுக்கும் அறிவு சிதைக்கப்பட்டு இருக்கின்றது. மனித உழைப்பின்றி எதையும் உருவாக்கவும், வாழவும் முடியாது என்ற உண்மையை மறுதளித்துவிடுகின்றது. சமூக உணர்வுகொண்ட மனிதனின் உழைப்பைத் திருடியும், அடக்குமுறை மூலம் அபகரிக்கும் சமூக உணர்வற்ற மனிதனின் வாழ்வு பற்றிய அறிவுதான், மனித சாரம் என்று கூறும் சர்வாதிகார அமைப்பு முறைமையே அறிவாக காணப்படுகின்றது.

மனித சமூகம் சார்ந்த கூட்டு உழைப்பு இன்றி, இன்றைய உலகில் மனித வாழ்வை வாழவே முடியாது என்ற உண்மையை மறுதளிக்கின்றது. மனிதன் இது பற்றிய அறிவை கொண்டிராதவனாக, மனித அறிவு குறுக்கப்பட்டு முடக்கப்பட்டு இருக்கின்றது. மனிதசமூகம் பற்றி தன் சுய அறிவற்று இருத்தலே மனித அறிவாக்கப்படுகின்றது. ஏழ்மையும், செல்வமும் என்ற இரு எதிர்மறைக் கூறில், மனித உழைப்புகாணப்படுகின்றது. அதைப் பயன்படுத்தும் முறைமையில் முரண்பாடே, இதற்கு காரணமாக இருக்கின்றது. சமூக உணர்வுள்ள மனிததன்மையற்ற கூறுகள் இதற்கான அடிப்படையாக இருக்கின்றது.

சமூக உணர்வுள்ள மனிதன், சமூக உணர்வுடன் சமூகத்தில் பகிர்ந்துகொள்கின்றான். இது சார்ந்த அறிவு அல்ல, சமூகதன்மையற்ற மனிதனின் அறிவு. சமூகத்தன்மையற்ற மனிதன், மனிதனுக்கு இடையில் பகிர்ந்து கொள்வதற்கு எதிரானவனாக இருக்கின்றான். இப்படி அறிவு இரண்டாக பிரிகின்றது.

உழைப்பு பற்றி வெறுக்கத்தக்க மனித எண்ணங்களும், எண்ணப்பாடுகளும் அறிவை முடக்கி தடைசெய்கின்றது. மனித உழைப்பு தனக்கு கீழ்ப்பட்டவனின் இழிவான தீண்டத்தகாத மனித செயற்பாடு என்று கருதும் தனிமனித வாழ்க்கைமுறை, சமூக உணர்வுள்ள மனித வாழ்வை மறுதளிக்கின்றது. சமூக உணர்வுள்ள மனித வாழ்வை மறுத்து, சமூக உணர்வற்ற மிருகத்துக்குரிய வாழ்வை முன்னிறுத்துகின்றது. இதுதான் தனிவுடமையின் சாரம். உழைப்பை அபகரிப்பதே அறிவாகவும், வாழ்வாகவும் போற்றப்படுகின்றது.

உழைப்பாளிதான் உற்பத்திசெய்யும் பொருளை மட்டுமின்றி, தான் உற்பத்தி செய்யும் திறனையும் கூட பிறருக்கும் கொடுக்கும் நிலையில், மனித கூறுகளையும் இழந்துவிடுகின்றான். உழைப்பவனிடம் பறிப்பதையே, சமூக அறிவாக்கப்படுகின்றது. இதற்கு இணங்கி அன்னியமாகி வாழ்தலையே, மனிதவாழ்வாக பேணப்படுகின்றது. உழைப்பவன் தனக்காக வாழ்தல் அல்ல. பிறருக்காக வாழ்கிறான். இதன் அர்த்தம்,தனக்குகீழ்ப்பட்டவனின் பிறரின் இழிசெயற்பாடாகஉழைப்புகுறுக்கப்பட்டு இருக்கின்றது. சமூக உணர்வற்ற தனிவுடமை சமூகத்தில், உழைப்புக்குரிய இடம் இதுதான்.

உழைப்பே மனிதக் கூறுகளாக இருந்த இடத்தில் இருந்து, உழைப்பேஅவனுக்குசொந்தமாக இருக்காதவண்ணம் மனிதனைமிருகமாக்கிவிட்டது.உழைப்பில்



# வெள்ளை யானை திட்டங்கள்: இது யாருக்கு இலாபம்?

## மாகம்புர துறைமுகம்

மாகம்புர கப்பல் தரிப்பிட துறைமுகத்தில் எத்தனை கப்பல்கள் இதுவரை நங்கூரமிட்டுத் தரித்திருக்கின்றன? மாத்தளையில் எத்தனை விமானங்கள் தரையிறங்கியிருக்கின்றன என்ற கேள்விகள் திரும்பத் திரும்ப எதிர்க்கட்சிகளினால் எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. உருவாக்கியிருக்கின்ற இத்திட்டங்கள் உண்மையில் யாருடைய இலாபத்துக்காக என்பதுவும் அதைவிட முக்கியமாக எங்கிருந்து இவ்வாறான திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்படுகிறது என்பதும் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டும். படுபாதாளத்திற்குள் நாட்டின் பொருளாதார நிலைமைகள் எல்லாத்துறைகளிலும் சரிந்து வீழ்ந்ததனால்,தாங்க முடியாதளவு வாழ்க்கைச் செலவீனத்தின் சுமைகளை மக்கள் அனுபவித்து வருகின்றார்கள். இருந்தும் கூட பெருந்தொகைப்பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்கென்று அரசானது வாரியிறைக்கின்றது.

மக்கள்நலன் அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்கள் வெற்று முகப்பு பலகைகளாலோ, அவற்றின் எண்ணிக்கை அடிப்படையிலோ அல்லது அவை எவ்வளவு பாரிய திட்டங்கள் என்பதனாலோ தீர்மானிக்கப்படுவதில்லை. உண்மையான மக்கள்நலன் சார்ந்த அபிவிருத்திகள் என்பது யாருக்காகவென உருவாக்கப்படுகின்றதென கூறப்படுகின்றதோ அந்த மக்களை சென்று சேர்ந்து அவர்களது வாழ்வாதார மேம்பாடுகளை உயர்த்தவேண்டும். ஒரு அரசானது மனிதநலன் பாற்பட்டும், பின்தங்கிவிட்ட பெரும்பாலான மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தி மேம்படுத்துவதற்காகவும் அபிவிருத்தி திட்டங்களை உருவாக்க வேண்டும்.

ஆனால் அரசுக்கு வரிசெலுத்தும் நாட்டின் பிரஜைகளான நாங்களும் எங்கள் வருங்கால தலைமுறையும் அபிவிருத்தித்திட்டங்கள் என்ற பெயரில் பல இன்னல்களுக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

ஆயிரத்து முந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாகம்புர மகிந்த ராஜபக்ஸ கப்பல் துறைமுகம் கொழும்பு கப்பல் துறைமுகத்திற்கு மாற்றீடான ஒன்றாகவே நிர்மாணிக்கப்பட்டதென கூறப்படுகின்றது. ஆனால் அத்துறைமுகம் திறப்புவிழாக் கண்ட ஆண்டான 2010 இலிருந்து எந்தக் கப்பலும் வராத துறைமுகமாக கைவிடப்பட்டுள்ளது.

இந்த துறைமுகம் பற்றி பரவலான விமர்சனங்கள் கூறுவது என்னவெனில் சர்வதேச தரத்துக்கும், சர்வதேச பாதுகாப்பு நியமங்களுக்கும் இத்துறைமுகம் ஒத்திருக்கவில்லை என்பதால் உலகளாவிய கப்பல் முகவர்கள் இத்துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்கு அச்சப்படுகின்றனர் என்பதாகும். அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இலக்கென திட்டமிட்ட வருவாயை அது எட்ட முடியாமல் 132 மில்லியன் இலங்கை ரூபாய்களாக வருவாய் வீழ்ந்து போனது. இலங்கை துறைமுக அதிகார சபை 500 தொடக்கம் 600 மில்லியன் இலங்கை ரூபாய்கள் என்றேவருவாயினை இலக்கிட்டிருந்தது.

ஆனால் தற்போது என்ன நிகழ்கிறதெனில் இலங்கை துறைமுக அதிகார சபையானது அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்துக்கென எக்ஸிம் சீன வங்கியிடம் பெற்ற கடன்தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு கொழும்புத் துறைமுகத்தினால் கிடைக்கும் பணத்தினைப் பாய்ச்சி அக்கடனை நிரவுகிறது. கப்பல்களுக்கான சேவை மற்றும் தொழில்துறை துறைமுகமாக முதலில் வடிவமைக்கப்பட்ட இத்துறைமுகமானது அளவுக்கு மீறிய வட்டிவீதத்தில் பாரிய கடன்களை சீனாவிடமிருந்து பெற்று உருவானதாகும். இப்போது எந்தக் கப்பலும் வந்து அழைக்காத துறைமுகமாக வெறிச்சோடிப் போய்க்கிடக்கின்றது.

முதற்கட்ட கட்டிட நிர்மாணங்களுக்கென 306 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுகடந்த 6.3 வட்டி வீதத்தில் கடனாகப்பெறப்பட்டது. இரண்டாம் கட்ட நிர்மாணங்களுக்கென மேலும் பெறப்பட்ட பெருந்தொகைக்கடன் 800 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் ஆகும். இக்கடனும்அதே வட்டிவீதத்திலேயே பெற்றுக்கொள்ளப்பட்டது. இவற்றை விடவும் இதர செலவுகளாக பாறைகளை தகர்க்கும் பணிக்கென 202 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலும் செலவிடப்பட்டுள்ளது. மொத்தமாக இலங்கை துறைமுக அதிகார சபையின் தரவுகளின்படி 1308 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கரைந்து போயுள்ளது. இந்த மொத்தக்கடன் தொகைகளும் 11 வருடங்களுக்குள், வருடத்துக்கு இரு தவணை முறையில் மீளச் செலுத்தப்பட வேண்டியதாகும்.

எந்தக் கப்பலும் வந்து அழைக்காத இந்தத்துறைமுகத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட இப்பாரிய கடன்சுமையை எவ்வாறு இலங்கை திருப்பி அடைக்கப்போகிறது என்பதே இப்போது எழுந்துள்ள பிரதான கேள்வியாகும்.

> **ஆயிரத்து முந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாகம்புர மகிந்த ராஜபக்ஸ கப்பல் துறைமுகம் கொழும்பு கப்பல் துறைமுகத்திற்கு மாற்றீடான ஒன்றாகவே நிர்மாணிக்கபட்டதென கூறப்படுகின்றது.**

வருடாந்த தவணைக்கடனான 6 பில்லியன் ரூபாயினை திருப்பி அடைக்க வேண்டுமாயின் ஆகக்குறைந்த வருவாயாக ஒரு வருடத்துக்கு 8 பில்லியன் ரூபாய்களை மாகம்புர துறைமுகம் உருவாக்கியே தீரவேண்டும். இதன் மூலமே கவுரமாக கடனினை திருப்பிச் செலுத்த முடியும்.

ஆனால் எந்த பொருளீட்டலும் நடைபெறாத நிலையில், முக்கியமாக எந்தக் கப்பலும் துறைமுகத்தினை பாவிப்பதற்கு வருவதில்லை என்ற காரணத்தால் இந்தத் துறைமுகத்திற்கான கடன்சுமைகள் யாவும் கொழும்பு துறைமுக நிர்வாகத்தின் மீது விழுந்துள்ளதெனவும் அவற்றை ஈடுசெய்து கௌரவத்தை பேணுவதற்கு தேவையான மேலதிக வருவாயை உருவாக்க கொழும்பு துறைமுகம் இழுத்துவிடப்பட்டுள்ளது என அதிகாரி ஒருவர் கருத்துக் கூறினார்.

## மாத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமானநிலையம்

இவ்வருட ஆரம்பத்தில் திறந்து வைக்கப்பட்ட மாத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமானநிலையம் இவ்வாறானமற்றொரு திட்டமாகும். 2000 ஹெக்டர் ஏக்கர் நிலப்பரப்பில் 26 பில்லியன் ரூபாய் பண இறைப்பில் இவ்விமான நிலையம் உருவாக்கப்பட்டது. அம்பாந்தோட்டை நகரத்திலிருந்து 43 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இவ் விமானநிலையம் அடர்ந்த காடுகளுக்கு நெருக்கமாக இருக்கின்றது. விமானங்கள் தரையிறங்குவதற்கான கட்டணம் இலவசம், தரித்துநிற்பதற்கான கட்டணம் இலவசம், 50 வீத சேவைக்கட்டணத் தள்ளுபடி என அரசாங்கம் வழங்கிவருகின்றது என்றாலும், அச்சலுகைகள் பிச்சையெடுத்தல் என்றாகியுள்ளது. இதுவரை எந்த சர்வதேச எயர்லைன்ஸ்களும் தங்களது பயணப்பட்டியலில் மாத்தளை ராஜபக்ஸ சர்வதேச விமானநிலையத்தினை சேர்த்துக் கொள்ளவேயில்லை. ஒரேயொரு எயர்லைன்ஸ் "எயர் அரேபியா" இவ் விமானநிலையத்தில் முன்பு இயங்கி வந்தாலும் தற்போது இந்த மாதத்துடன் திரும்பப் பெறப்போவதாக தீர்மானித்துள்ளது. இவ் விமானநிலையத்தின் வழியாக பறப்பது இலாபகரமானது இல்லை என்பதால் இரண்டாவது சர்வதேச விமானநிலையத்தின் வழி தொடர்ந்தும் பறப்பது சாத்தியமானதில்லை எனவும் கூறியுள்ளது.

மாத்தளை விமானநிலையத்தினை தூக்கிநிறுத்தநுழைந்த சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானசேவையானது கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கும் மாத்தளை விமானநிலையத்துக்கும் இடையிலான நாளாந்த பறப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இன்னுமொரு சர்வதேச விமானநிலையம் நாட்டுக்கு அவசியம் என்று உணரப்பட்டிருந்த போதும் நிர்மாணிக்கப்பட்ட மாத்தளை விமானநிலையமானது தவறான இடத்திலும் தவறான காலத்திலும் கட்டப்பட்டு இருக்கின்றது என வாதிடப்படுகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொலன்னாவ எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மாத்தளை ராஜபக்ச விமானநிலையத்திற்கு விமான எரிபொருளை எடுத்துச்செல்லும் போக்குவரத்தின் மூலம் மேலும் நிதி இழப்பை சந்தித்து வருகின்றது.

மாத்தளை ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் விமானம் மற்றும் கப்பலுக்கான எரிபொருள் தாங்கிகள் இல்லாமையானது இலங்கை பெற்றோலிய சேமிப்பு ரேமினல் லிமிட்டெட் இந்த வகை எரிபொருளை எடுத்துச் செல்வதற்கு தரைவழி வாகனப் போக்குவரத்தினை பயன்படுத்துவதால் அதனால் ஏற்படும் செலவுகளை தாங்க வேண்டியுள்ளது.

## மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிக்கட் ஸ்ரேடியம்

உலகக்கிரிக்கெட் கிண்ணப் போட்டிகளுக்கென 2011 ம் ஆண்டில் அம்பாந்தோட்டையிலுள்ள சூரியவேவ எனுமிடத்தில் 700 மில்லியன் ரூபாய்களில் மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிக்கட் ஸ்ரேடியம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இந்த தொகுதிக்கட்டிடம் 32000 இருக்கைகள் கொண்டதாக 47 ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் கட்டிமுடிக்கப்பட்டு இன்று பாவனையில் அரிதாகவே உள்ளது. இரண்டு உலக கிரிக்கட் கிண்ணப்போட்டிகள் மற்றும் சில தனிப்பட்ட போட்டிகள் நீங்கலாக மற்றும்படி இவ்வரங்கம் காடாய் தனித்துவிடப்பட்டுள்ளது.

## அம்பாந்தோட்டை விளையாட்டு வலயம்

2018 ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட அம்பாந்தோட்டை விளையாட்டு வலயம் இவ்வரிசையில் கைவிடப்பட்டுள்ள இன்னொன்றாகும். 15 பில்லியன் ரூபாய் பணவிரயத்தில் கட்டப்பட்டு கைவிடப்பட்டிருக்கும் இந்த விளையாட்டு வலயம் அம்பாந்தோட்டை, சூரியவேவவில் மூன்றாவது பெரிய அபிவிருத்தி வலையமாக, புதிய சர்வதேச கிரிக்கெட் ஸ்ரேடியத்துக்கு அருகாமையிலேயே இருக்கின்றது. பொதுநலவாய நாடுகளுக்கான விளையாட்டுப்போட்டிகளை இலங்கையில் நடாத்துவதற்கான உரிமையை இலங்கை, அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டிடம் இழந்து போனது இதன் காரணம்.

## நுரைச்சோலை மின்சார நிலையம்

நுரைச்சோலை மின்சார நிலையம் மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மலிவான மின்சாரத்தை வழங்குவது என்ற

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)



# ஒடுங்கியும் ஒடுக்கியும் வாழ்வதா மனித இயல்பு?

> **இருந்தும் மாணவர்கள் தம் உரிமைக்காக போராடாது ஒடுங்கியும் ஒதுங்கியும் வாழ்கின்றார்கள் என்றால், ஒடுக்குமுறை மட்டும் தான் காரணமா? ஒடுக்குமுறை என்பது, போராட்டங்களின் முன் புதிதாக தோன்றியதல்ல.**

மனிதர்கள் அடக்கியும் ஒடுங்கியும் இருத்தலையே ஒடுக்குமுறையாளன் விரும்புகின்றான். இதை எதிர்த்துப் போராடுவதே, ஒடுக்கப்பட்டவர்களின் இயல்பாக இருக்கின்றது. இதுவே என்றென்றும் மனித இயல்பாகவும், வாழ்வாகவும் இருக்கும் என்று கருதுகின்றோமா!? இப்படி இருக்க கடந்தகாலத்தில் போராடிய தமிழ் மாணவர்கள் பரம்பரை, இன்று ஒடுங்கியும், ஒதுங்கியும் இருக்கக் காரணமென்ன? இதிலிருந்து மீண்டெழுவது எப்படி?

இன்று அரசால் திட்டமிட்ட வகையில் மாணவர்களின் அடிப்படைக் கல்வி உரிமைகள் பறிக்கப்படும் போதும், தமிழ் மாணவர்களின் அமைதி என்பது, சமுதாயத்தின் பொது அடிமைத்தனத்துக்கே இட்டுச் செல்லும். அடக்குமுறை கண்டு அஞ்சுவதோ, அதற்கு அடங்கிப்போவதோ மாணவர்களின் இயல்பல்ல. இருந்தும் மாணவர்கள் தம் உரிமைக்காக போராடாது ஒடுங்கியும் ஒதுங்கியும் வாழ்கின்றார்கள் என்றால், ஒடுக்குமுறை மட்டும் தான் காரணமா? ஒடுக்குமுறை என்பது, போராட்டங்களின் முன் புதிதாக தோன்றியதல்ல. ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமே கடந்தகால வாழ்வாக இருந்திருக்கின்றது. ஆக இது புதிய விடையமல்ல. ஒடுக்குமுறை என்பது இருந்து வருவது தான். இன்று ஒடுக்குமுறையைக் கண்டு அஞ்சும் புதிய சூழலுக்கு காரணமென்ன?

கடந்தகாலப் போராட்டம் தான். ஒடுக்குமுறையை எதிர்த்து போராடிய போது, கையாண்ட வழிமுறைகள் தவறுகள் இன்று போராட முடியாத சூழலை உருவாக்கி இருக்கின்றது. இதுவே இன்று ஒடுக்குமுறையாளனைக் கண்டு அஞ்சி ஒடுங்கக் காரணமாக அமைந்து விடுகின்றது. கடந்தகால தவறுகளால் ஒடுக்குபவன் ஒடுக்குவதில் வெற்றி பெறுகின்றான். அதாவது ஒடுக்குமுறைக்கு எதிராக தனிமைப்பட்டு போன கடந்தகால கொள்கைகளும் நடத்தைகளுமே, இன்று ஒடுங்கிப் போக காரணமாகிவிடுகின்றது.

கடந்தகாலத்தை மீளாய்வு செய்ய வேண்டிய வரலாற்றுக் காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். குறிப்பாக இது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் முதன்மையான விடையமாக இருக்கின்றது. இன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மாணவர்கள், அனைவருக்குமான கல்வி உரிமைக்காக போராடும் நேரத்தில், சிறுபான்மை இன மாணவர்கள் ஒடுங்கிக் கிடப்பது என்பது, கடந்தகால இனவாத அரசியலின் பொது விளைவாகும். இனரீதியான ஒடுக்குமுறை மட்டுமல்ல, இனரீதியான ஒடுக்குமுறைக்கு எதிரான இனவாதமாக குறுக்கிப் போராடியதும் ஒரு காரணமாகும்.

கடந்தகாலத்தில் சிறுபான்மை இன மாணவர்கள் தங்களைத் தாங்களே இனரீதியாகக் குறுக்கிக் கொண்டனர். இதன் மூலம் இனவொடுக்குமுறையாளனின் ஒடுக்குமுறைக்கு உதவும் வண்ணம், தம்மைத்தாமே தனிமைப்படுத்திக் கொண்ட வரலாற்றுத் தவறுதான், சிறுபான்மை மக்கள் இன்று ஒடுங்கிவாழும் இயல்பாக மாறி இருக்கின்றது. இதன் மூலம் ஒடுக்குபவன் வெற்றி பெற்று இருக்கின்றான்.

இதில் இருந்து விடப்பட்டு ஒடுக்குமுறையாளனின் நோக்கத்தை எதிர்கொண்டு வெல்ல வேண்டுமாயின்

1.சிறுபான்மை மாணவர்கள் பெரும்பான்மை மாணவர்களுடன் இணைந்து போராட வேண்டும். அதாவது பொதுவான மாணவர்கள் போராட்டங்களில் ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலம், தம்மீது இனரீதியாக தனிமைப்படுத்தி ஒடுக்கும் ஒடுக்குமுறையில் இருந்து விடுபடவேண்டும். இதன் மூலம் சிறுபான்மை மீதான இனரீதியான ஒடுக்குமுறைக்கு எதிராக, பெரும்பான்மை மாணவர் சமூகத்துடன் இணைந்து போராட முடியும்.

2.மாணவர்கள் தமக்குள் தாம் குறுக்கிக் கொண்டும், தனிமைப்படுத்திக் கொள்வதற்கும் பதில், மக்களை தம்முடன் இணைத்துக் கொண்டு போராட வேண்டும்.

தனித்து இயங்குவது, தனிமைப்பட்டு நிற்பதுதான் தோல்விக்கான அரசியல் அடிப்படை. தனிமைப்படுத்தி ஒடுக்குவதன் மூலம் தான், ஒடுக்குமுறையாளனின் வெற்றியாக இவை மாறுகின்றது. கடந்த காலத்தில் தனிமைப்பட்டுப்போன குறுகிய இனவாதமும், மக்களுக்கு விடுதலை பெற்று தருவதாக கூறி மக்களிடம் தனிமைப்பட்டுப் போன அரசியல் தவறுகள், இன்று ஒடுங்கியும் ஒதுங்கியும் வாழும் நிலைக்கான அடிப்படையான அரசியல் காரணமாகும்.

இன்றைய இந்த நிலைமைக்கு ஒடுக்குமுறையாளனை மட்டும் காரணமாகக் காட்டுவதும், எண்ணுவதும், எங்கள் கொள்கைகளும் நடைமுறைகளும் காரணமல்ல என்பதுவும், எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும். இப்படி இதை பிரச்சாரம் செய்பவன் மோசடிக்காரனாகவும், ஒடுக்குமுறைக்கு உதவுபவனாகவும் இருக்கிறான்.

ஒடுக்குபவன் ஒடுக்குமுறையை ஏவியதாலேயே, கடந்தகாலத்தில் போராடினோம். போராடித் தோற்றதால், ஒடுக்குமுறையை நாம் தெரிந்து கொள்ளவில்லை. உண்மையில் ஒடுக்குமுறையை தோற்கடிக்க முடியாமல், நாம் தோற்றோம். அதாவது எங்கள் போராட்டம் ஒடுக்குமுறையை தோற்கடிக்க முடியாத வண்ணம், தவறாக இருந்ததால் தோற்றோம். இப்படித்தான் இதை நாம் மீள்பரிசீலனை செய்யவேண்டும். வெல்ல வேண்டும் எனில் கடந்தகாலத்தில் என்ன செய்து இருக்க வேண்டும் என்று, மீள சிந்திக்குமாறு மாணவர்கள் போராட்டங்கள் கோருகின்றது.

இனரீதியாக மாணவர்களைப் பிரித்து ஒடுக்குகின்ற அரசின் இனக்கொள்கைக்கு எதிராக, இனங்கடந்து போராடுவதன் மூலமே அதை முறியடிக்க முடியும். நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளை முன்வைத்து, அனைவரையும் ஒன்றிணைக்கின்ற வரலாற்றுக் கடமை மாணவர்களுக்கு உண்டு. இனம், சாதி, பால், நிறம் .. என்று மாணவனைப் பிரிக்கின்ற, மாணவர்களை மோதவைக்கின்ற மனிதவிரோத கூறுகளை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராடுவதன் மூலம் ஒடுக்குமுறையை எதிர்கொண்டு முறியடிக்க முடியும்.

இன்று பறிக்கப்படும் மாணவர்களின் கல்வி உரிமைக்காக, இனம் கடந்து போராடுவது அனைத்து மாணவர்களினதும் இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

மாணவர்களின் இலவசக் கல்விக்கான அடிப்படை உரிமையை மறுக்கின்றதும், கல்வியை சந்தைப் பொருளாக்குகின்ற அரசின் செயற்பாடுகளே, மாணவர்களுக்கு எதிரான அரசின் பொதுக் கொள்கையாக உள்ளது. இதற்கு எதிராக இன்று மாணவர்கள், பொதுமக்கள் போராட்டங்கள் நடந்து வருகின்றன. பல பத்து இலட்சங்கள் இருந்தால் மட்டும் தான், இனிமேல் பல்கலைக்கழகப் பட்டங்கள் என்ற அளவுக்கு, கல்வி வியாபாரப் பொருளாக்கப்படுகின்றது. இனம், மதம் கடந்தும், பெரும்பான்மை சிறுபான்மை என்று இல்லாமலும், அனைத்து மாணவர்களுக்கும் எதிரான மூலதனத்தின் கொள்கை அரசால் இன்று முன்னெடுக்கப்படுகின்றது.

பணம் இருந்தால் தான் கல்வி, இதுதான் தேசத்தின் கல்விக் கொள்கையாக மாறி வருகின்றது. மக்களின் உழைப்பிலான வரிப்பணத்தில் இருந்து அனைவருக்குமான இலவசக் கல்வி என்ற கடந்தகால கல்விக் கொள்கையை மறுப்பதன் மூலம், பணம் இருந்தால் தான் கல்வி என்ற மனிதவிரோத வியாபாரக் கொள்கைகள் புகுத்தப்படுகின்றது. கல்விக்கான மக்களின் வரிப்பணத்தில் இருந்து ஒதுக்கிய நிதியை வெட்டுமாறு உலக வங்கி கோருகின்றது. கல்விக்கான மக்களின் வரிப்பணத்தை, தனது நிதிமூலதனத்துக்கான வட்டியாக தரும்படி கோரும் நிதிமூலதனத்தின் கொள்கைக்கு அமைவாகவே, கல்வி தனியார் மயமாக்கப்படுகின்றது. இதன் மூலம் தனியார் மூலதனத்தைக் கொண்டு, கல்வியையே வியாபாரம் செய்யுமாறு கோருகின்றது.

இப்படி எங்கள் மக்களின் வரிப்பணத்தில் இருந்து ஒதுக்கிய கல்விக்கான வரிப்பணத்தைக் கொள்ளையிடவும், கல்வியை சந்தைப் பொருளாக்கி மக்களைச் சூறையாடவும் முனைகின்ற இரட்டைக் கொள்கையே அரசின் இன்றையக் கல்விக் கொள்கையாகும். இன்றைய மாணவர் போராட்டங்கள், இதற்கு எதிராகவே முன்னெடுக்கப்படுகின்றது.

இன்றைய மாணவர்களின் அடிப்படைக் கல்வியையும், எதிர்கால மாணவர்களின் கல்வி உரிமைகளையும் பறிக்கின்ற நவதாராளமயக் கொள்கைதான் அரசின் பொது அரசியல் நடத்தையாகின்றது. தேசத்தின் தேசியக் கொள்கைகளை மறுத்து, நவகாலனிய நவதாராளமயத்தைப் புகுத்தி சூறையாடுகின்ற, இந்த மக்கள் விரோதத்தை எதிர்த்து மாணவர்கள் போராடவேண்டிய வரலாற்றுக் கடமையாக மாறியுள்ளது. இதற்கு எதிராக இன்று பெரும்பான்மை மாணவர் சமூகம் போராடும் நிலையில், சிறுபான்மை மாணவர் சமூகம் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளால் ஒடுங்கி ஒதுங்கி நிற்கின்றது.

இதில் இருந்து மீண்டு எழுவது வரலாற்றுக் கடமை. கடந்தகாலத்தில் இனரீதியான ஒடுக்குமுறையையும், அதற்கு எதிராக இனரீதியான குறுகிய அணுகுமுறையுமே, இதற்கு எதிராக இன்று போராட முடியாமல் போனதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.

இதை இன்று சுயமாக மீளாய்வு செய்வதன் மூலம், பெரும்பான்மை மாணவர் சமூகத்தின் துணையுடனும், பாதுகாப்புடனும் இணைந்து போராடுவதன் மூலமே மாணவர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முடியும். இந்த உண்மையில் இருந்துதான், ஒதுங்கியும் ஒடுங்கியும் வாழும் எம்மை நாம் விடுவித்துக் கொண்டு சமூக உணர்வுள்ள மனிதனாக வாழமுடியும்.

# ஏனென்றால் புரட்சி என
# மட்டுமல்ல-அது நடை

**நோர்வே மார்க்சிய தொழிலாளர் கட்சியை சேர்ந்தவரும், அதன் அரசியல் செயற்பாட்டாளரும், ஐரோப்பா மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் "புதிய ஜனநாயக மக்கள் முன்னணி" எனும் அமைப்பில் இயங்கி வரும், இடதுசாரிக் கொள்கையுடையவருமான தோழர் நியுட்டன் அண்மையில் இலங்கை வந்திருந்த போது, போராட்டம் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி**

போராட்டம்: அரசியல் தொடர்பாக கதைக்கும் முன் தங்கள் இளமைக்காலம், கல்வி நடவடிக்கை குறித்து சற்று கூறுங்கள்

நியுட்டன்: ஊர்காவற்துறையில் இருக்கும் மெலிஞ்சிமுனை என்பதே எனது சொந்த இடம். கடற்தொழிலே எமது வாழ்வாதாரம். வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தவர்களே தமிழ் சமூகத்தில் ஆதிக்கத்தை கொண்டிருந்தனர். மீன்பிடிச் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால், நாம் சிறு வயது முதலே ஒடுக்குமுறைகளுக்கு ஆளானோம். அவ் ஒடுக்குமுறை அனுபவம் தான் அரசியலில் என்னை ஈடுபாடு கொள்ள வைத்தது .

போராட்டம்: இடதுசாரி அரசியலில் ஈடுபாடு ஏற்பட்டது எவ்வாறு?

நியுட்டன்: எனது தந்தையார் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர். 1967ஆம் ஆண்டளவில் தோழர் ரோகன விஜவீர யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்தார். 71 கிளர்ச்சியின் பின் அந்த தோழர்களில் சிலர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். சிங்கள தோழர், தோழியர் அவர்களை பார்க்க வந்து சென்றனர். அதன் பின் நான் சிறுவனாக இருந்தாலும் இளைஞராகவிருந்த எனது தந்தையார் ஆயுத போராட்ட இயக்கங்களுடன் தொடர்புகளை கொண்டிருந்ததாக எனக்கு நினைவிருக்கின்றது.

போராட்டம்: ஆயுத போராட்ட குழுக்களில் இவ்வாறு இடதுசாரிய நூல்களை வாசிக்க ஆர்வம் காட்டிய குழுவினர் யாரென்று நினைவிருக்கின்றதா?

நியுட்டன்: அவர்கள் புளோட் இயக்கத்தை சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும். அவர்கள் எனது தந்தையாருடன் எங்கள் வீட்டில் விவாதங்களில் ஈடுபடுவதை கேட்டிருக்கின்றேன். அந்த காலப்பகுதியில் கியுபா, வியட்னாம் குறித்து கதைப்பதை கேட்டிருக்கின்றேன்.

போராட்டம்: அப்படியிருந்தும் நீங்கள் ஆயுத போராட்ட இயக்கங்களில் இணைந்து கொண்டது எவ்வாறு?

நியுட்டன்: நான் ஆயுத போராட்ட இயக்கத்தில் இருக்கவில்லை. ஆனால் மாணவர் அமைப்பில் சிறு காலம் இயங்கியுள்ளேன். நான் கல்வி கற்ற பாடசாலையான புனித அந்தோனியார் கல்லூரியில் சாதி காரணமாக ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டோம். அந்த பாடசாலையின் ஆசிரியர்கள் பெரும்பாலும் வேளாள சாதியை சேர்ந்தவர்கள். எம்மை பார்த்து நீங்கள் கீழ் சாதியை சேர்ந்தவர்கள் ஏன் பாடசாலைக்கு வருகின்றீர்கள், கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டியது தானே என்று கேட்பர். இவை என்னை அதிகம் பாதித்தது. பாடசாலையில் இதற்கு எதிரான மாணவர்கள் பலருடன் ஆசிரியர்களுக்கு எதிராக செயற்பட்டோம்.

எம் மீதான ஒடுக்கு முறைக்கு எதிராக நாம் ஏதேனும் செய்தாக வேண்டிய நிலையிலிருந்தோம். அந்தக் காலப்பகுதியை என் வாழ்க்கையின் சிறந்த காலப்பகுதி என நினைக்கின்றேன். நான் நிறைய புத்தகங்களை வாசித்தேன். சோவியத் நூல்களுடன் கியூபா குறித்தும் வாசித்தேன். குறிப்பாக கேஸ்ட்ரோவின் நீதிமன்ற பிரகடனம் உள்ளடங்கிய "வரலாறு எம்மை விடுவிக்கும்" என்ற நூல் எனக்கு உத்வேகத்தை அளித்தது.

போராட்டம்: அந்த காலப்பகுதியில் வடக்கில் இடதுசாரிகளின் அரசியல் செயற்பாடுகள் இருக்கவில்லையா?

நியுட்டன்: அந்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடதுசாரி அரசியல் தான் முன்னணியில் இருந்தது. பிரதான அரசியல் போக்காகவும் இடதுசாரியமே ,ருந்தது. ஆனால் அவர்களின் அரசியல் பிழை என்பதுவும், எங்கு பிழை இருந்தது என்பதையும் இன்று பிற்காலத்தில் தான் நான் அறிந்து கொண்டேன். எனினும் அதன் மூலம் இடதுசாரிய கருத்தியல் முன்னெடுக்கப்பட்டு ஓரளவுக்கேனும் முற்போக்கான தலைமைத்துவங்கள் உருவாக்கப்பட்டன. அதனால் தான் என் போன்றவர்களுக்கு மார்க்சியம் லெனினியம் குறித்து தெரிய வந்தது.

அந்த காலப்பகுதியில் வாசிப்புக்கள் எனக்கு ஓரளவுக்கு அரசியல் அறிவை கொடுத்திருந்தது. நான் என்னை அறிவாளியாகவே நினைத்து கொண்டேன். “தாய்“ நாவலில் வரும் பாவேலாகவே என்னை கற்பனை செய்து கொண்டேன். ஆனால் உண்மையில் நடப்பவற்றை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் ஆற்றல் இருக்கவில்லை. அந்த காலபகுதியில் நோர்வேயின் உதவி திட்டம் ஒன்றின் மூலம் சீனோர் எனும் அமைப்பு கடற்தொழிலாளர் மத்தியில் செயலாற்றியது. அதன் மூலம் எனது தந்தையின் உறவினர்கள் நோர்வே சென்றார்கள். எனது தந்தையார் அந்த கால பகுதியில் நான் ஆயுத குழுக்களுடன் இணைந்து விடுவேன் என்ற அச்சத்துடனே இருந்தார். அதன் காரணமாக என்னையும் நோர்வே அனுப்பி விட்டார்.

போரமாட்டம்: நோர்வே சென்று என்ன செய்தீர்கள்?

அங்கு நான் கல்வி பயின்ற அதேவேளை, இடதுசாரி அரசியலில் இணைந்து செயற்பட்டேன். உண்மையில் நோர்வேக்கு வந்த பின்னரே அரசியல் தொடர்பான அறிவு கிடைத்தது. 1990 களில் யுத்த காலத்தில் தமிழ் டயஸ்போரா அங்கு வளர்ச்சியடைந்தது. நோர்வே உட்பட மேற்கத்தைய நாடுகள் தமிழ் அகதிகள் தொடர்பில் கவனம் செலுத்தின. அதனுடன் விடுதலை புலிகளின் செயற்பாடும் வளர்ச்சியடைநத். தமிழ் டயஸ்போரா மத்தியில் நாம் இடதுசாரி அரசியலை முன்னெடுக்கும் குழுவாக இயங்கினோம். அந்த கால பகுதியில் விடுதலை புலிகள் ஏனைய ,யக்கங்களை அழித்து தனியான இயக்கமாக உருவெடுத்தனர். அதே போன்று புலம்பெயர் தமிழ் சமூகத்தயும் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர் .

> **பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் பண்பாட்டு உரிமைகள் சிதைக்கப்படுகின்றன. இதற்கு சமாந்திரமாக தமிழ், முஸ்லிம் மக்களை இனவாத ஒடுக்கு முறைக்கு ஆளாக்கும் அமைப்புக்கள் இயக்கப்படுகின்றன.**

விடுதலை புலிகள் மற்றய இயக்கங்களுடன் சேர்ந்து இயங்கியிருந்தார்கள் எனின் வலுமிக்க போராட்டத்தின் மூலம் ஈழத்தை அமைத்திருக்கலாம். ஆனால் அந்த கலந்துரையாடலுக்கு தயாரில்லாத அரசியலையே அவர்கள் முன்னெடுத்தார்கள். ஏராளமானோர்கள் அவர்களினால் கொலை செய்யப்பட்டார்கள். கடைசியில் லட்சக்கணக்கானோர் போரில் கொலை செய்யப்பட்டது மட்டுமே எஞ்சியது.

ஐரோப்பாவில் செயற்படும் போது விடுதலை புலிகளுக்கு எதிராக இடதுசாரிய அரசியலை முன்னெடுப்பது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. தமிழ் மக்களின் ஒரே ஒரு மீட்பர்களாகி விட்ட அமைப்புடன் அரசியல் கருத்தியல் போராட்டத்தை நடத்திடவே நாம் முயற்சி செய்தோம்.

சஞ்சிகைகள் மற்றும் இணையம் மூலம் பல்வேறு வழிகளில் தமிழ் மக்களை தெளிவுபடுத்தி வந்தோம். புலம் பெயர்ந்து வாழ்ந்த தமிழர்கள் தாய் நாட்டில் நடக்கும் விடயங்களை அவ்வாறே அறிந்து கொண்டார்கள். ஆனாலும் தேசியவாத ,ணையத்தளங்களிற்கு மத்தியில் ,டதுசாரிய போக்குடைய இணையத்தளங்கள் பெரிதாக ,ல்லை. "தமிழ் அரங்கம்" எனும் இணையத்தளம் எம் தோழர்களால் நடத்தப்பட்டது.

விடுதலை புலிகளுக்கு பதிலாக இடதுசாரி இயக்கம் ஒன்றினை கட்டியெழுப்பும் நோக்கில் செயற்பட்டோம். ஜரோப்பியாவில் அல்லாது இலங்கையில் இடதுசாரி இயக்கமொன்றினை கட்டியெழுப்புவதே எமது முக்கிய நோக்கமாகவிருந்தது.

போராட்டம் மூலம் தமிழீழத்தை அமைப்பதே எமது மக்களில் பெரும்பான்மையினரின் எண்ணமாவிருந்தது. எனினும் அதனை சகோதர இன மக்களின் குறிப்பாக, சிங்கள மக்களின் ஆதரவின்றி சாத்தியமாக்கிட முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனால் விடுதலை புலிகள் இதைக் கவனத்தில் கொள்ளவில்லை . தமிழ் மக்கள் மட்டுமே போதும் என்ற நிலைப்பாட்டுடன் தான் செயற்பட்டனர்.

விடுதலை புலிகள் வலதுசாரி அமைப்பாகும். எனது தோழர்கள் பலர் விடுதலை புலிகளை முற்போக்கு தேசிய சக்தியாக- தவறாக விளங்கிக் கொண்டு உதவிகளை செய்தனர். சில சந்தர்ப்பங்களில் இந்திய மற்றும் மேற்கத்தைய ஏகாதிபத்தியங்களுக்கு எதிரானவர்களாக புலிகள் நடந்து கொண்டதால் புலிகளை பலர் அவ்வாறு விளங்கிக்கொண்டனர். ஆனால் விடுதலை புலிகள் பிரேமதாசவுடன் சேர்ந்து என்ன செய்தார்கள்? சிங்கள இளைஞர்களை கொன்று குவித்த பிரேமதாசவுடன் ஹோட்டல்களில் நடத்திய பேச்சுவார்த்தையின் நோக்கம் என்ன? அன்று பலர் அரசியல் மாயைக்குள் சிக்கியிருந்தார்கள். தற்போது அவர்களுக்கு உண்மை புரிய ஆரம்பித்திருக்கின்றது.

அன்று நாம் வெளிநாடுகளில் இருந்தவாறு பத்திரிக்கைகள், சஞ்சிகைகள் மூலம் அரசியல் போராட்டம் ஒன்றினை நடத்தி சென்றோம். ஆனால் விடுதலை புலிகள் தமிழ் மக்களின் போராட்டத்தை அழிவை நோக்கி கொண்டு சென்றனர். ஆனால் தற்போது நிலைமைகள் வேறு என்பதால் தமிழ் மக்களிடம் முற்போக்கு இயக்கமொன்றிற்கான தேவை முன்பை விட அதிகமாக இருக்கின்றது.

போராட்டம்: நோர்வே பிரசையான நீங்கள் கட்சி அல்லது அமைப்புகளினூடாக அரசியலில் ஈடுபடுகின்றீர்களா?

நியுட்டன்: நான் நோர்வேயில் உள்ள ஒரு சிறிய மார்க்சிச தொழிலாளர் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றேன். அது நோர்வேயின் 4.5 மில்லியன் மக்களில் 1.5வீதம் மக்ககளின் வாக்குகளை தேர்தலில் பெறும் மிக சிறிய கட்சியாகும். ஆனால் பாராளுமன்ற அரசியலுக்கு வெளியில் பல போராட்டங்களை நடத்துகிறது.

போராட்டம்: யுத்தம் முடிந்த பின் நாட்டிற்கு வந்து அரசியலில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லையா?

நியுட்டன்: எம்மில் பலர் 1987 தொடக்கம் இலங்கையிலிருக்கும் தமிழ் இடதுசாரிகளை ஒன்றிணைத்து அரசியல் இயக்கமொன்றினை உருவாக்கிட முயற்சி செய்தோம். ஆனால் அதற்கு போதுமான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அதனால் ஜரோப்பிய தோழர்களுடன் இணைந்து 2009 க்கு பின் ஆரம்பித்த "புதிய ஜனநாயக மக்கள் முன்னணி" ஊடாக இயங்கி வருகின்றோம். இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து மார்க்சிய கோட்பாட்டுப் போராட்டத்துடன் ஒரு பகுதியினர் வெளியேறி செயற்பட ஆரம்பித்தமை எமக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது.

ஜே.வி.பியை விட்டு வெளியேறியவர்கள் முன்வைத்த விமர்சனத்தினுள் நாம் தமிழ் மக்கள் தொடர்பாக ஜே.வி.பி மீது முன் வைத்த விமர்சனமும் உள்ளடங்கியிருந்தது. அதன் காரணமாக அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கொள்ள முயற்சித்தோம்.

ஜரோப்பாவில் முன்னிலை சோசலிச கட்சி தோழர்களுடன் இணைந்து செயற்பட்டோம். தற்போது சமவுரிமை இயக்கத்தில் அரசியல் உடன்பாட்டுடன் செயற்படக் கூடியதாயுள்ளது. "சமவுரிமை இயக்கம்" ஜரோப்பிய தமிழ் மக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களிற்கான இடதுசாரி இயக்கம் சிங்கள மக்களிற்கான இடதுசாரி இயக்கம் என்று ஒன்றில்லை. அனைத்து மக்களின் விடுதலைக்கு போராடும் இயக்கமே இன்று தேவையாக இருக்கின்றது. நாட்டில் ஒடுக்கப்படுபவர்களுக்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அப்படியான இடதுசாரி இயக்கமொன்றினை கட்டியெழுப்பிட நாம் ஒன்றுபட வேண்டும் என்ற கொள்கையிலேயே இருக்கின்றோம்.

70களில் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுப்பட்ட ஜேவிபி யினர் அதன் பின் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த பின்னர் யாழ்ப்பாணம் சென்று அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனை ஒரு நல்ல விடயமாக பார்க்கின்றீர்களா?

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியலை மூன்று கட்டங்களாக பிரித்து இனங்காண விரும்புகின்றேன். முதலாவது 1965 தொடக்கம் 1971 வரையிலான காலப்பகுதி. இரண்டாவது 1971 தொடக்கம் 1989 வரையிலான காலப்பகுதி. மூன்றாவது 1994 முதல் தற்போது வரையிலான காலப்பகுதி. முதல் இரண்டு கட்டங்களிலும் அதன் கோட்பாடு, நடைமுறை மீது விமர்சனம் இருந்தாலும் உழைக்கும் வர்க்கத்தின் விடுதலைக்கான வேலைத்திட்டங்களை ஜே.வி.பி முன்னெடுத்தது. எனினும் 1994 ஆம் ஆண்டிற்கு பின் இனவாத அரசியலையே முன்னெடுத்தது. அதனை இன்று இனவாத கட்சியாகவே நான் பார்க்கின்றேன். ஆனால் அதன் உறுப்பினர்கள் அனைவரும் இனவாதிகள் அல்ல. சந்தர்ப்பவாத கட்சி தலைமையால் கட்சி இனவாதம் நோக்கி கொண்டு செல்லப்பட்டது. அரசாங்கத்திற்கு தேவையான வகையில் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டது.

விடுதலை புலிகளை அழித்த பின், நாடு முழுவதிலும் இடதுசாரி அரசியலை கட்டியெழுப்பலாம் என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும். எனினும் அது தவறான தந்திரோபயமாகும். யுத்தத்திற்கு அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்துத் தமிழ் மக்களை கொன்று குவித்த பின், அதனை நியாயப்படுத்தியபடி தமிழ் மக்களிடம் சென்று இடதுசாரி அரசியல் கதைக்க முடியுமா? முழு நாட்டையும் உள்ளடக்கிய இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப தமிழ் மக்கள் ஜேவிபிக்கு எப்படி உதவுவார்கள்?

ஜேவிபி யினர் யாழ்ப்பாணம் சென்று அரசியல் செய்கின்றார்கள் தான். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு இல்லை. ஜேவிபி சந்தர்ப்பவாதத்தினுள் அகப்பட்டு எமது மக்களை கொலை செய்ய உதவியாகச் செயற்பட்டவர்கள். அதனை மறப்பது எப்படி? மறப்பது கடினம். அந்த விமர்சனம் இன்னும் அப்படியே இருக்கின்றது. ஆகவே ஜேவிபி யாழ்ப்பாணம் சென்று என்ன செய்தாலும், அவர்களால் வர்க்க கட்சியாக முன்நிற்க முடியாது. தமிழ் உழைக்கும் வர்க்கத்தை வென்றெடுக்க முடியாது.

போராட்டம்: 2009 ல் யுத்தம் முடிந்த பின் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் குறித்து உங்களது அமைப்பு கொண்டிருக்கும் நிலைப்பாடு என்ன?

நியுட்டன்: 2009ன் பின் அரசாங்கம் மும்முரமாக நவதாரளமய பொருளாதாரத்தை நடைமுறைபடுத்த ஆரம்பித்துள்ளது. பொருளாதாரத்திற்கும் மக்கள் அரசியலிற்கும் இடையிலாக முரண்பாடு தோன்றியுள்ளது. 2009-,ற்கு முன் யுத்தமும் இனபிரச்சனையும் சமூகத்தில் நிலவிய பிரதான முரண்பாடாக இருந்தன. அது தற்போது முதலாளித்துவத்தின் தேவைக்கும் ஒடுக்கப்படுபவர்களின் தேவைக்கும் இடையிலான முரண்பாடாக மாறிவருகிறது .

நவ தாராளமயத்தின் இரண்டாவது கட்டம் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எனினும் யுத்தத்தின் காரணமாக செய்ய முடியாமல் போனதை தற்போது மஹிந்த அரசு செய்கிறது. இவ்வரசியலின் தொடர்ச்சியாகவே தமிழ் மக்களின் வாழ்வாதரம் கொள்ளை அடிக்கப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணம், வன்னி போன்ற பிரதேசங்களில் புதிய வளங்களை தேடி கொள்ளையடிப்பதை மகிந்தவே செய்கிறார். முழு சமுகமும்

நுகர்விற்கு அடிமையான சமூகமாக மாறிக் கொண்டு வருகிறது.

அதேவேளை போக்குவரத்து, வைத்தியசாலை, பாடசாலை போன்ற நலன்புரி சேவைகளிற்கான ஒதுக்கீடுகள் வெட்டப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டு கொண்டிருக்கிறன. மறுபுறத்தில் இயற்கை வளங்கள் விற்கப்பட்டு கொண்டிருக்கின்றன. நாலாபக்கமும் நிறைந்திருக்கும் கடல் வளம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் ஏனைய ஏகாதிபத்திய நாடுகளுக்கும் பிரித்து கொடுக்கப்படுகின்றன. பெரும் ரோலர்கள் மூலம் கடல் வளம் கொள்ளையடிக்கப்படுகிறது. இதை இலங்கை மீனவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

பொதுவாக வறுமை அதிகரித்துள்ளது. பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

# ன்பது வெறும் உணர்வு முறை வேலையாகும்!



அன்றாட வாழ்க்கை செலவு அதிகரித்து சென்றாலும் வருமானம் அதிகரிக்கப்படவில்லை. விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்திடம் அவற்றிற்கு விடை இல்லை.

பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் பண்பாட்டு உரிமைகள் சிதைக்கப்படுகின்றன. இதற்கு சமாந்திரமாக தமிழ், முஸ்லிம் மக்களை இனவாத ஒடுக்கு முறைக்கு ஆளாக்கும் அமைப்புக்கள் இயக்கப்படுகின்றன. அரசாங்கம் இனவாத அரசியலை முடுக்கி விட்டு பிரச்சனைகளை மூடி மறைத்து வருகின்றது.

தற்போது இங்கை இராணுவம் சிங்கள இராணுவம் இல்லை என்பது தெரிந்துவிட்டது. அது அரச படையாகும். இதுவரை வடக்கில் தமிழ் மக்களை கொலை செய்த இாணுவம் தற்போது தெற்கிலும் கொலைகளை செய்ய ஆரம்பித்துள்ளது. இந்த இராணுவம் அதிகார வர்க்கத்தின் இராணுவம் என்பதினை கட்டுநாயக்காவில், சிலாபத்தில் அண்மையில் வெலிவேரியாவில் இாணுவம் நடத்திய கொலைகளுடன் அம்பலமாகியுள்ளது.

மக்களின் பட்டினி பிரச்சினை அதிகரித்து கொண்டு செல்கிறது. சிறுவர்களின் மந்த போசனை கூடிக்கொண்டே செல்கிறது. சிறுவர்களும் பெண்களும் பெரும் சமூக ஒடுக்கு முறைக்கு ஆளாகியுள்ளனர். சிறுவர்கள் பெண்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றன.

இவற்றை உடனடியாக மாற்றிட வேண்டிய காலம் இது. நல்லதொரு சமூகத்தை உருவாக்கிட நாம் சமூகமாக வெற்றியடைய வேண்டும். அந்த இலக்கை அடைய முதலாளித்துவத்தை தோற்கடித்த- உழைக்கும் வர்க்க அரசு அவசியமாகிறது. அதற்காக செயற்பாட்டு திறனுடைய சமூக இயக்கம் ஒன்று தேவை. சிங்கள இனவாதத்திற்கும் தமிழ் குருந்தேசியவாதத்திற்கு மாற்றீடாக அனைத்து ஒடுக்கப்பட்டவர்களிற்காகவும் போராடும் இடதுசாரி இயக்கம் ஒன்று தேவை!

**“ கட்சியின் முழு வேலைகளையும் நிறுத்திவிட்டு விவாதம் நடத்துவதை என்னால் விளங்கி கொள்ள முடியவில்லை. அது கற்பனாவாத சிந்தனையாகும். வெறும் அரசியல், கோட்பாடு தத்துவங்கள் மூலம் உலகை மாற்றிட முடியாது. ”**

இந்த எமது ,லக்கு நோக்கிய பயணத்தில், முன்னிலை சோசலிச கட்சி போன்ற புதிய இடதுசாரி இயக்கம் செயற்பட ஆரம்பித்தது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அனைத்து மக்களின் நலன்களிற்குமான போராட்டத்தின் தேவை பற்றி கூறினீர்கள். அதற்கு என்ன மாதிரியான ,டதுசாரி கட்சி அவசியமென கருதுகின்றீர்கள்?

இந்நாட்டில் முதலாளிவர்க்க நலன்களிற்காக நிறைய கட்சிகள் இருக்கின்றன. குட்டி முதலாளித்துவ கட்சிகளும் இருக்கின்றன. ஆனால் உழைக்கும் வர்க்கத்திற்கு கட்சி ஒன்று தேவை. அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி தேவை. உழைக்கும் வர்க்கத்திற்கு அதிக பிரச்சனைகள் இருக்கின்றன. பிரச்சனைகளுக்கு காரணம் முதலாளித்துவம் என்பது எமக்கு தெரியும். ஆகவே முதலாளித்துவத்திற்கு எதிராக போராடும் கட்சியே எமக்கு அவசியமாகின்றது.

போராட்டம்: அதன் வேலைத்திட்டம் எப்படி இருத்தல் வேண்டும்?

நியுட்டன்: அதன் கொள்கை பைபிளை தளுவியதாகவோ ஆன்மீகமாகவோ, பின் நவீனத்துவமாகவோ அல்லது வேறு கொள்கைகளாகவோ இருக்க முடியாது! அதன் கொள்கை மார்க்சிய லெனிசமாகத் தான் இருத்தல் வேண்டும்! மார்க்சிய - லெனினியமே முதலாளித்துவத்திலிருந்து ஒடுக்கப்படும் மக்களை விடுதலையாக்கும் வழியை முன்வைத்த மார்க்கமாகும். ஆகவே, எமக்கு அடிப்படை தத்துவம் தொடர்பாக சந்தேகம் எதுவுமில்லை. மார்க்சிய- லெனினிய அடிப்படையில் இருந்து தான் எந்த கலந்துரையாடலையும் நடத்திட வேண்டும்.

முன்னிலை சோசலிச கட்சி தோழர்களிடையே ஏற்பட்டிருக்கும் விவாதங்கள் தொடர்பாக அறிந்ததினாலேயே இதனை கூறுகின்றேன். விவாதங்கள் கட்சிக்கு அத்தியாவசியமானதாகும். ஆனாலும் கட்சி வேலைத்திட்டம், அதன் அடிப்படை தொடர்பாக நடைமுறையில் பரீட்சிக்கப்பட்ட அனுபவங்கள் இக்கின்றன. இடதுசாரிகளின் போராட்ட வரலாறு உள்ளது. இதன் அடிப்படயில் எம் சமூகத்தின் மாற்றத்தை குறிக்கோளாகக் கொண்டு அவசியமான வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

போராட்டம்: முன்னிலை சோசலிச கட்சிக்குள் நடக்கும் விவாதம் பற்றி ?

நியுட்டன்: முன்னிலை சோசலிச கட்சி தோழர்களுக்கு, ஜேவிபி யிலிருந்து வெளியேறிய பின் அரசியல் திட்ட மாற்றங்கள் குறித்து சிந்திக்க போதுமன கால அவகாசம் கிடைக்கவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனாலும் கோட்பாடு மற்றும் நடைமுறை தொடர்பாக ஒருவருட காலத்திற்கும் அதிகமான கால அனுபவம் அவர்களிற்கிருக்கிறது. எவ்வாறாயினும் உழைக்கும் வர்க்க கட்சியின் கொள்கையாக மார்க்சியமே இருக்க முடியும். விவாதங்கள் நாடாத்துவது தான் அமைப்பின் செயற்பாடு என்பது தவறு. அது மார்க்சிய வழி முறை அல்ல. வேலைகளை முன்னெடுக்கும் நேரத்திலேயே நடைமுறைகளை பரீட்சித்தலும், சுயவிமர்சனம் மூலம் விவாதிப்பதுவுமே நடைமுறையாக இருத்தல் வேண்டும். அரசியல் வேலைத்திட்டம் குறித்தோ, தத்துவ கோட்பாடு குறித்தோ விவாதம் நடத்துவதாயின் அடிப்படை வேலைகளை முன்னெடுத்தவாறே நடத்திட வேண்டும். கட்சியின் முழு வேலைகளையும் நிறுத்திவிட்டு விவாதம் நடத்துவதை என்னால் விளங்கி கொள்ள முடியவில்லை. அது கற்பனாவாத சிந்தனையாகும். வெறும் அரசியல், கோட்பாடு தத்துவங்கள் மூலம் உலகை மாற்றிட முடியாது.

அதனை நடைமுறைபடுத்திடும் ஓர் அரசியல் நடைமுறை வேலை முறை அவசியமானதாகும். வேலைமுறைகளுடாக முரண்பாடுகள் தொடர்பாக விவாதம் நடத்தப்பட்டு மீண்டும் வேலைதிட்டம் முன்கொண்டு செல்லப்படல் வேண்டும். வேலைத்திட்டம், அதன் நடைமுறை- அதனூடாக விவாதம், மீண்டும் மெருகேற்றப்பட்ட வேலைத்திட்டம்- மீண்டும் அதன் நடைமுறை, மீண்டும் விவாதம் என்பதுவே அரசியல் போராட்டமாகும்.

எமக்கு ஒரு கொள்கை இருக்கிறது. கோட்பாட்டு அடிப்படை இருக்கிறது. சமூகம் குறித்த தெளிவு இக்கின்றது. சமூகத்தின் பிரதான முரண்பாடு எது, பிரதானமற்ற முரண்பாடு எதுவென்ற தெளிவு இக்கின்றது. அதன் அடிப்படையில் நாம் செய்ய வேண்டிய அரசியலே இடதுசாரி அரசியலாகும்.

அதை விடுத்து தோழர்கள், தத்துவம் தொடர்பான தேடலில் - கற்றலில் ஈடுபட, தத்துவம் தொடர்பாக நம்பிக்கை இன்மையே காரணமாகும்.

இவ்வாறு தான் தென்னிந்திய இதுசாரிகள் தலித்தியம் கற்கவும், ஜரோப்பிய இடதுசாரிகள் பின்நவீனத்துவத்தை கற்கவும் சென்றார்கள். ஆனால் தற்போது ஜரோப்பிய மார்க்சியம் மறுபடியும் அடிப்படையை தேடி செல்கிறது. எமக்கு மார்க்சியம் தேவைப்படுவது உழைக்கும் வர்க்க கட்சியாக இயங்குவதற்கு ஆகும். அது குறித்து விவாதிக்கலாம். ஆனால் அதற்காக அரசியல் வேலைகளை நிறுத்தும் அதிகாரம் ஒரு வர்க்க கட்சிக்கு இல்லை. காரணம் கட்சி மக்களுக்காகவே.

போராட்டம்: ஆனால் அரசியல் விவாதம் என்பது இடதுசாரி அரசியலில் கோட்பாட்டு பிரச்சனை மற்றும் நெறிபிறழ்வு தொடர்பாக சுமூகமான தீர்மானத்திற்கு வரும் நோக்கில் நடைமுறைபடுத்தப்படும் விடயம் அல்லவா?

நியுட்டன்: நடைமுயற்ற அரசியல் விவாதம் எங்கோ கொண்டு போய் விடும் என்பது தொடர்பாக எனது நோர்வேகிய தாய் கட்சியின் நல்லதொரு அனுபவத்தை கூற முடியும்.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின் மார்க்சிய கட்சிகள் மேற்கு ஐரோப்பாவில் சீரழிவிற்குள்ளாகின. அமெரிக்காவின் அரசியல், பொருளாதார, கோட்பாட்டு திட்டங்கள் ஜரோப்பவில் எழுச்சியடைந்தன. மார்க்சிய லெனினிய கோட்பாடுகள் தொடர்பான விவாதங்கள் பல்கலைக்கழகங்ளில் மட்டுமே இடம்பெற்றன. இந்நிலையில் 60-களின் இதியில், ஜரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார வீட்சியுடன் மீண்டும் இடதுசாரி அரசியற் தேவை ஏற்பட்டது.

இந்த காலப்பகுதியில் உலகின் ஏனைய பகுதிகளில் காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டங்கள் நடந்து வந்தன. மாவோ சீனாவில் புரட்சியை தலைமை தாங்கினார், ஹோசிமின் வியட்நாம் போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். கஸ்ரோவும் சே குவேராவும் கியுபா போராட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். அணுகுண்டிற்கு எதிரான போராட்டங்கள் நடந்தன. உலகை மாற்றிட வேண்டும் என்ற கோசம் முன்னிலை பெற்றது.

மார்க்சியம் குறித்த கலந்துரையடல்கள் மீளவும் ஆரம்பித்தன. 1968,ல் பல்கலைக்கழகங்களை பிரதானமாகக் கொண்டு மாணவர் போராட்டங்கள் நடந்தன. மார்க்சிய கட்சிகள் புது உத்வேகம் பெற்றன. எனினும் மாணவர்கள் பெரியவர்கள் ஆனதும் அரசியல் போராட்டங்கள் மந்தமடைந்தன. காரணம் வர்க்க பேதங்களிலே உலக அரசியல் போக்கின் சுபாவம் அமைந்திருக்கின்றது.

1970 க்கு பின் கல்வி நடவடிக்கையின் போது பின்நவீனத்துவம், ஆன்மீகம், ஆத்மா தொடர்பான கோட்பாடுகள், பெண்ணியம், சூழலியல், பாலின உரிமை மற்றும் வேறு பண்பாடுகள் தொடர்பான விவாதங்கள் அப்போது மேற்கு பல்கலைக்கலகங்களில் இடம் பெற்றன. அவை கட்சிகளின் கோட்பாட்டு விவாதங்களினுள்ளும் கொண்டு வரப்பட்டன.

உதாரணமாக, 70-80 ,ல் நான் உறுப்பினராக உள்ள கட்சியில், பெண் ஒடுக்கு முறைதான் அடிப்படை முரண்பாடு எனும் நோக்கில் நின்று விவாதிதார்கள். அதேபோன்று, ஜெர்மனில் சூழல்- மற்றும் இயற்கை வளப்பாதுகாப்பு மிக முக்கிய விவாத தலைப்பாக மார்க்சீச லெனினிய சக்திகள் விவாதித்தனர். அத்துடன் விவாதிப்பதே மிக முக்கிய வேலையாக வரையறுத்தனர். இந்நிலை அப்போது பரவலாக மேற்கு ஐரோப்பா முழுவதும் காணப்பட்டது .

ஆனால், அவர்கள் விவாதம் முடிந்து வெளியே வரும் போது கட்சிகள் சீரழிந்து போயின. அல்லது ஆதிக்க வர்க்கம் சார்ந்த காட்சிகளாக - குட்டி பூர்சுவ சக்திகளாக மாறி இருந்தன .

ஆனால் தற்போது ஜரோப்பியாவில் என்ன நடக்கிறது? கீரீசில் (புசநநஉந), இங்கிலாந்தில், ஜேர்மனியில், ஜரோப்பிய ஒன்றியத்தில் நடப்பது என்ன? மக்கள் போராட்டங்களை நடத்துகின்றார்கள். ஆனால் போராட்டங்களை ஒன்றினைப்பதற்கு அமைப்பு ரீதியாக மத்தியபடுத்துவதற்கு உழைக்கும் வர்க்க கட்சி ஒன்று இல்லை.

இடதுசாரி கட்சிகள் இருக்கின்றன. அந்த கட்சிகளில், தான் வாழும் சமூகம், உலகம் குறித்து கோட்பாட்டு ரீதியாக தெளிவுபடுத்தும் கொள்கை குறித்து மட்டும் விவாதம் செய்யும் அறிவுஜிவிகள் மட்டுமே அங்கம் வகிக்கின்றார்கள். பெண்ணிய சிந்தனையாளர்கள், மார்க்சிய அறிவுஜீவிகள் என எல்லா வகையினரும் அக்கட்சிகளில் இருக்கின்றனர். அவர்கள் உலகில் என்ன நடக்கிறது என நிறைய புத்தகங்கள் எழுதுகின்றார்கள். ஆனால் 70-80 களில் நடந்த பாதிப்புக்கள் அப்படியே இருக்கின்றன. மக்களை அவர்களால் அணி திரட்ட முடியவில்லை .

இலங்கையில் பல்வேறு நிலைமைகள் மாறி மாறி வந்தாலும் மார்க்சிய கோட்பாடு சார்ந்த போராட்டமொன்று தொடர்ந்து இடம்பெற்று வந்தது. கோட்பாட்டு ரீதியான- அரசியல் ரீதியான பிழைகள் இருந்தாலும், ஒரு அரசியல் போராட்ட பண்பாடு நம் நாட்டில் நிலவுகிறது. சரி- பிழைகளுக்கு அப்பால், தமிழ் மக்களின் தேசியப் போராட்டம் போலவே இரண்டு முறை சமவுடமையை நோக்காக கொண்ட போராட்டங்கள் நடந்துள்ளன. அந்த போராட்ட பண்பாட்டுடன் கூடிய, ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்ட அனுபவம் இலங்கை மக்கள் அனைவருக்கும் உண்டு.

இதன் அடிப்படையில், போருக்குப் பின் மக்கள் போராட்ட களத்தில் இறங்கியுள்ளனர்! அப்படியானால், விவாதத்தில் மட்டும் திளைத் திருக்கும் தோழர்கள், அந்த மக்களை தனியாக போராட விட்டுவிட்டு, மேற்குலக நாடுகளின் மார்க்சியவாதிகள் செய்தது போல் விவாதம் செய்து கொண்டிருக்க போகின்றோமா? அல்லது நடைமுறை அரசியல் செய்ய போகின்றமா என தீர்மானத்திற்கு வர வேண்டும்.

முன்னிலை சோசலிச கட்சியின் தலைமையும் அதன் தோழர்களும் இந்நிலைமையை விளங்கி கொள்வார்கள் என நினைக்கின்றோம். வரலாறு எல்லாவற்றிற்கும் தீர்ப்புக்களை வழங்கும். அதனை கருத்தில் கொள்ளாவிடின் வரலாறு எம்மை குப்பை தொட்டியில் தள்ளி விடும். தற்போது இலங்கை தமிழ், முஸ்லிம், சிங்கள ஒடுக்கப்படும் மக்களுக்கு- உழைக்கும் வர்க்கத்திற்கு கட்சி ஒன்று அவசியமாகின்றது. மார்க்சியத்தை விட்டு விலகிய குட்டி முதலாளித்துவவாதிகள் கட்சியை அழித்திட இடமளித்திட முடியாது. ஏனென்றால் புரட்சி என்பது வெறும் உணர்வு மட்டுமல்ல- அது நடைமுறை வேலையாகும்.




# CHOGM ஏலத்தில் விற்கப்படும் கல்வி

> **அதிவேகப் பாதைகள் திறக்கப்படுகின்றன, பாதைகளுக்கு காபட் இடப்படுகின்றன. பாதையோரங்களில் பூக்கன்றுகள் நடப்படுகின்றன. நடப்பட்ட ஓரிரு நாட்களிலேயே அவை பூக்கவும் செய்கின்றன.**

CHOGM அல்லது பொதுநலவாய நாடுகளினது அரசத் தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடக்கவிருக்கின்றது. இதற்காக முழு நாடும் இன்று விழாக்கோலம் பூண்டுள்ளது. இந்த மாநாடு முடிந்த பின்னர் நாட்டு மக்கள் அனைவரினதும் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் கூறுகின்றது. அது உண்மைதானா? பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? அல்லது இருமடங்காகுமா? இது குறித்து நாங்கள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவையெல்லாம் ஒரு மாயாஜாலம் என்றுதான் நாங்கள் நினைக்கின்றோம். எதுவுமே நடக்கப்போவதில்லை. இறுதியாக நடக்கப்போவது என்னவென்றால், இந்த மாநாட்டிற்காக திறைசேரியிலுள்ள பணம் தாராளமாகச செலவு செய்யப்பட்டு திறைசேரி திவாலாகிவிடுவதுதான். அதன் பிறகு, காலியாகும் திறைசேரியை நிரப்புவதற்காக வரிக்குமேல் வரி விதிக்க வேண்டும், நலனோம்புகைக்கான கடைசிச் சொச்சமும் வெட்டப்பட்டுவிடும். மாநாடு முடிந்த கையோடு வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. இது விழாக் கொண்டாட்டத்தின் பின்னர் நடக்கும் ஒரு ஏலமிடுதல் மாத்திரமே. அதன் பிறகு அனைத்துச் சுமைகளும் மக்கள் தலையில் வந்து விடியும். எல்லாச் செலவுகளுக்கும் ஈடு கட்ட வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்படும்.

அபிவிருத்தி மாயை

அதிவேகப் பாதைகள் திறக்கப்படுகின்றன, பாதைகளுக்கு காபட் இடப்படுகின்றன. பாதையோரங்களில் பூக்கன்றுகள் நடப்படுகின்றன. நடப்பட்ட ஓரிரு நாட்களிலேயே அவை பூக்கவும் செய்கின்றன. கப்பல் வராத துறைமுகங்கள், விமானம் தரை இறங்காத விமான நிலையங்கள் கட்டப்படுகின்றன. இதோ! நாடு அபிவிருத்தியடைகிறது என்று கூறுகிறார்கள். சிந்திக்கத் தெரியாத சமூகத்தில் மாத்திரமே இவற்றை அபிவிருத்தி என்று கூறி ஏமாற்ற முடியும். இல்லையென்றால் இவற்றை அடிப்படை வசதிகளை விரிவாக்குதல் என்ற வகையிலேயே அல்லாது அபிவிருத்தி என்று ஏமாறுவதற்கு எவருக்கும் மூளையில் பிரச்சினை கிடையாது. பொருளாதார வளர்ச்சியோடு ஏற்படக்கூடிய மனிதர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதைத்தான் அபிவிருத்தி என்கிறோம். கல்வி, சுகாதாரம், போன்ற அத்தியாவசியத் தேவைகளின் வளர்ச்சியும் இதில் அடங்கும். ஆனால் இந்த மனிதர்களின் வாழ்க்கை நிலையை அளவிடும் சுட்டி நாளுக்கு நாள் சரிந்துக் கொண்டிருக்கின்றதே, அது எந்த வகையான அபிவிருத்தி? சம்பளம் உயரவில்லை. வருமானம் ஒரே இடத்தில் தேங்கி கிடக்கின்றது. வாழ்க்கைச் செலவு விண்ணை முட்டுகிறது. உயிர்முச்சு வாங்கும்வரை உழைக்க வேண்டும். சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுவதைத் தவிர வேறு முன்னேற்றம் கிடையாது.

அவர்களது இலாபம் நாட்டின் பரிதாபம்

பணமுதலைகளின் இலாபத்திற்காக குடிக்கும் தண்ணீரில் கூட நச்சைக் கலந்த நாடு. அந்த தண்ணீரைக் குடித்து சிறுநீரக நோய் தாக்கி நாள்தோறும் மனிதர்கள் மரணிக்கும் நாடு. நோய் நொடியால் பாதிக்கப்பட்டால் மருந்து வாங்குவதற்காக பஸ்ஸில் ஏறி பிச்சை எடுக்கும் நாடு. சிறுவர்கள் வழிப்போக்கில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நாடு. இவற்றிற்குக் காரணமான




அநியாயக்காரர்கள் ஆட்சி செய்யும் நாடு. விலங்குகளைப் போன்று நடுப்பாதையில் மனிதர்களைக் கொன்று போடும் நாடு. நாள்தோறும் பாடசாலைகளை மூடும் நாடு. பாடசாலைகளுக்குச் செலுத்துவதற்காக சிறுவர்கள் திருட்டில் ஈடுபடும் நாடு. உயர்தரப் பரீட்சையில் 3 ”ஏ”க்களை எடுத்தாலும் பல்கலைக் கழகம் கிடைக்காத நாடு. படிக்க வேண்டிய வயதில் உள்ள சிறுவர்கள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுத்தும் நாடு. உடலை விற்றுப் பிழைக்கும் நாடு. இந்த நாட்டைப் பார்த்து அபிவிருத்தியடையும் நாடு என்று சொல்ல நாங்கள் என்ன எருமைகளா?

இந்த களியாட்டங்களால் எங்களுக்கு என்ன கிடைக்கும்? இந்த பென்னாம்பெரிய தேசாபிமான அரசாங்கம் காலனித்துவ வரலாற்றையும் அடிமைத்தனத்தையுமல்லவா பெருமையோடு நினைவு கூறுகிறது. சிங்களத்தில் வெள்ளையனைத் திட்டி வேசம் போடும் போலி தேசாபிமானிகள் இன்று என்ன செய்கிறார்கள்? மக்கள் பணத்தை கோடிக்கணக்கில் செலவளித்து பட்டுக் கம்பளம் விரித்து யாரை வரவேற்கப் போகிறார்கள். அவர்கள் திட்டும் அதே வெள்ளையனைத்தானே? கல்விக்கும் சுகாதாரத்திற்கும் செலவிட வேண்டிய பணத்தை இங்கே விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாநாட்டின் பின்னர் நாடு மேலும் கடனில் மூழ்கும். அந்த சுமையும் எங்கள் மீது விழுவதைத் தவிர வேறொன்றும் கிடைக்கப்போவதில்லை. இந்த இரட்டை நிலையை நாங்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். இவர்கள் எல்லோரும் செய்வது பொய். கடைசியில் வதைபடுவது நாங்கள் என்பதுதான் மெய்.

இவ்வாறாக பாடசாலைகளை மூடி, பாதைகளை மூடி, பல்கலைக் கழகங்களை மூடி, முழு நாட்டினதும் வேலைகளை நிறுத்திவிட்டு மாநாடு நடத்திய நாட்டைப் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா? இன்று அனைத்து பல்கலைக் கழகங்களும் மூடப்பட்டுள்ளன. அது ஏன்? திறந்து வைத்தால் ஆர்ப்பாட்டங்கள் வரும். அப்படி நடந்தால் கல்வியை விற்கும் வேலை குழம்பிவிடும், நாட்டின் நிர்வாணம் உலகுக்குத் தெரிந்துவிடும் என்ற பயத்தினால்தான். இங்கு வரும் இளவரசர் சார்ள்ஸ் எங்களுக்காக ஒரு பரிசையும் கொண்டு வருகிறார். அதுதான் கல்வி வர்த்தக வலயம். இவற்றினால் எதிர்காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு கல்வி

(தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# காணாமற் போனவர்களுக்காக குரல் கொடுத்து காணமற் போனவர்..!

போர் பல ஆயிரம் மக்களைத் தொலைத்துவிட்டது. தமிழ்த் தேசியம்.., தமிழீழம்.., என்று பேசிப் பேசியே தொலைந்து போனவர்களோ ஏராளம். ஆனால் இவர்கள் உண்மையானவர்கள்.., நேர்மையானவானவர்கள். அவர்களது அரசியல் பிழையாக இருந்தாலும் கூட, தங்களது அரசியல் தான் தமிழ் மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று முடிவான நம்பிக்கையினை தமக்குள் வளர்த்துக் கொண்டவர்கள். அவர்களிடம் தமிழ்த் தேசியம் பேசி மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் எள்ளவும் இருந்ததில்லை. இந்த நேர்மையினால் தான் இவர்கள் தொலைந்து போனார்கள். ஆனால் திட்டமிட்டு தமிழ்த் தேசியம் பேசி மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல்வாதிகள் புலம்பெயர் நாட்டிலும், இலங்கையிலும் மிக வசதியாக அரசின் அரவணைப் போடு சந்தோசமாச வாழ்கின்றார்கள். தமிழ்தமிழ் என்று தொண்டை கிழிய கத்தும் இவர்கள் காணாமற் போன மக்களுக்காக எந்த போராட்டமும் நடாத்தியதில்லை. மாறாக இனவாதம் பேசி இன்னும் பல மக்களை தொலைத்து விடுவதிலேயே முனைப்பாகவுள்ளார்கள்.

அன்று காணாமற் போனவர்கள் அந்நியர்கள் இல்லை. இவர்கள் எமது மக்கள். இவர்கள் முன்னெடுத்த அரசியற் பாதை தவறாக இருந்தாலும் உண்மை உணர்வோடு தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார்கள். ஆனால் இந்த உயிர்களுக்காக குரல் கொடுக்க இன்று யாரும் தயாராகவில்லை.

இந்த நிலையில் தான் முற்போக்கு சிந்தனையும், அரசியல் நிலைப்பாட்டினையும் கொண்டிருந்த லலித், குகன் இருவரும், காணாமற் போனவர்களின் உறவுகளது வேதனையையும், கண்ணீரையும் கண்டு கலங்கி நின்றார்கள். தங்களுக்கும் குடும்பம் இருக்கின்றது என்பதை மறந்து காணாமற் போன மக்களுக்காக இலங்கை அரசினை கேள்வி கேட்டார்கள். சில போராட்டங்களை நடாத்தினார்கள். இலங்கை அரசு வழமை போல தனது பாசிச அடக்கு முறை என்ற வலையினை விரித்தது. இன்று அவர்களும் காணாதவர்கள் ஆகிவிட்டார்கள்.










காணாமற் போன அந்த மக்களுக்காக குரல் கொடுத்து இவர்கள் இன்று காணாமல் போனதால் அவர்களது குடும்பங்கள் ஆதரவற்று நிற்கின்றது. கணவனது நாளாந்த வருமானத்தில் நாட்களை நகர்த்திய குடும்பம் குழந்தையினை படிக்க வைக்கக் கூட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அவர்கள் எங்கே.. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெரிவிக்க அரசு மறுக்கின்றது. அந்த குடும்பத்திற்கு உதவி செய்ய முன்வருபவர்களையும் மிரட்டுவதால் சாதாரண மக்கள் தங்களுக்கு தொல்லை வேண்டாமென ஒதுங்கியுள்ளார்கள். சில தோழர்களின் ஆதரவு தான் இப்போது அந்த குடும்பத்திற்கு கிடைத்துள்ள சிறிய நம்பிக்கையாகும்..!

# கொலையாளிகளின், கொள்ளையர்களின் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம்

எண்பத்துமூன்று ஆடி இனக்கலவரம். இனவெறி அரசின் காடைத்தனம் கண்டு பொங்கி எழுகிறார்கள். இனி இது பொறுப்பதில்லை என்று வீடுகளை விட்டு வீதிக்கு வருகிறார்கள். மக்களிற்காக,மண்ணிற்காக மரணத்தையும் எதிர்கொள்வோம் என்று அலை அலையாக எழுந்தார்கள். பெற்ற தாய்,தந்தையரை விட்டு,காதலுக்குரியவர்களை விட்டு, கைக்குழந்தைகளைக் கூட விட்டு விட்டு இனி ஒரு விதி செய்வோம் என்று விண்ணதிர வந்தார்கள். பாசம் அறுத்து, நேசம் மறந்து, ஆசை துறந்து நம்தேசம் மீட்போம் என்று வெஞ்சமர் புரிய வந்தார்கள்.



டெல்லியில் இருந்தவர்கள் கோரப்பற்களை தெரிய சிரித்துக் கொண்டார்கள். வங்கதேசத்தில் தேசபக்தர்களை கொன்று தள்ளி தங்களின் தரகர்களிடமும், மதவாதிகளிடமும் ஆட்சி அதிகாரத்தை கொடுத்தவர்கள் மறுபடி ஒரு வேட்டைக்கு வேளை வந்ததென வாயில் நீர் ஊற பார்த்திருந்தார்கள். ஆயுதம் தருகிறோம், ஆயுதப்பயிற்சி தருகிறோம் என்றார்கள். எமக்கு எதுவும் வேண்டாம் எல்லாம் உமது விடுதலைக்காகவே என்று கருணைமழை பொழிந்தார்கள்.

மூன்றுமாதப்பயிற்சி முடிந்தவுடன் தனிநாடு ஏறுங்கள் தோணி என்று ஏற்றி விட்டார்கள் தலைவர்கள். "அட்டைகள் இரத்ததானம் செய்யுமா" என்று கேட்ட குரல்கள் கும்பல்களின் கூச்சலில் அடங்கிப்போயின. "வங்கம் தந்த பாடம்" என்ன என்று சொல்ல வந்தவர்களின் கண்டம் அறுத்து கொலை செய்தார்கள். "திடீர் சாம்பார்","திடீர் ரசம்" போல் திடீர் புரட்சியும் வருமோ என்றால் கப்பல் எரியும் போது முதலில் எங்களை காப்பாற்றி கொள்ளப் பார்ப்போம், பிறகு மற்றதைப் பார்க்கலாம் என்றார்கள்.

அங்கிருந்து தூ ண்டில் போட்டவர்கள் ஆளை ஆள் வெட்ட சொன்னார்கள். அடுத்த இனத்தவனை அடித்துக் கொல்ல சொன்னார்கள். கொஞ்சி கொஞ்சி பேசிய குழந்தைகளைக் கூட குதறி எடுத்தார்கள் இவர்கள். மற்ற மதத்தவரை கொல்லச் சொன்னார்கள் அவர்கள். மண்டி இட்டு தொழுதவரை கொன்றார்கள் இவர்கள். ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்குபவர்கள் ஆகினர். போராளிகள் பயங்கரவாதிகள் ஆகினர். வேலை முடித்த போசகர்கள் வெற்றிப் புன்னகை சிந்தினார்கள்.

எத்தனை முறை சூடு கண்டாலும் அடுப்பங்கரைகளை மாற்றினார்களே தவிர அனுபவங்களை பெறவில்லை. டெல்லி இருக்கும் திசை நோக்கி தினமும் தொழும் தமிழ்நாட்டுக் கோமாளி டெல்லியை மீறி பணம் கொடுத்தானாம். காவல் தெய்வம் என்று கதை சொல்கிறார்கள். சர்வதேச போசகர்களின் சகா வத்திக்கான் போப்பின் உள்ளூர் பாதிரி ஒருவன் பிலிப்பைன்சில் இருந்து கொண்டு வானொலியில் தமிழ் மக்களின் வேதனைகளை சொல்லி அழுகிறான் அவனும் போசகன் தான் என்றார்கள்.

மீட்பர்களின் வருகைக்காக காத்திருந்தார்கள். நேரிலே வந்து கொன்றார்கள் சிலர். வெட்டிய வாளிற்கு வெண்ணெய் பூசி விட்டார்கள் சிலர். குண்டுகள் சிதறின. குருதி வெள்ளம் பாய்ந்தது. மண்ணில் உயிர்கள் மறைந்து போயின. நம்பிக்கைகள், நாளைய கனவுகள் மறைப்புகள் அற்ற வெளியில் அடியோடு சரிந்தன. மீட்பர்கள் கண்ணீர் விட்டார்கள். சாட்சியம் மட்டும் இருந்தால் தூக்கிலே போடுவோம் என்றார்கள்.

முள்ளிவாய்க்காலின் நினைவாக தமிழ் நாட்டிலே நினைவுமுற்றம் ஒன்று கட்டுவோம் என்றார் "மாவீரர்" ஒருவர். மறுபடியும் போசகர்கள் வந்தார்கள். மக்களின் பணத்தை கொள்ளையடித்து மகாபணக்காரன் ஆனவனின் பணத்திலே மக்களிற்கான நினைவுமன்றம் கட்டப்பட்டது. அதற்கென்ன ஆர் குற்றினாலும் அரிசி ஆனால் சரிதானே. குஜராத்திலே கொன்றவர்கள் கொலையுண்ட மக்களின் நினைவிடத்தை திறந்து வைக்க வந்தார்கள். ஆயிரம் அழிவுகள் வந்தால் என்ன கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் தான் போசகர்கள். ஒடுக்கப்படும் எல்லா இனமக்களும் சேர்ந்து போராடுவோம் என்பவர்கள் தமிழின துரோகிகள்.

# வடமாகாண சபையினுள்ளும் சர்வதேச முரண்பாடுகள்






கூட்டமைப்பினுள்ளும், வடமாகாண சபையினுள்ளுமான முரண்பாடுகள் தொடர்பாக ஊடகங்களும், அதில் சம்பந்தப்பட்டவர்களும் கூறுவது போல் பதவிகள், அதிகாரங்கள், உரிமைகள் சார்ந்தவையல்ல. இப்படி பலரும் பொதுவாக புரிந்து கொண்டது போலல்ல, இதன் பின்னுள் இயங்கும் அரசியல்.

வெளிப்படையானதும் மேலெழுந்தவாரியாகவும் வெளிப்படும் முரண்பாடுகளைப் புரிந்துகொள்ள, கூட்டமைப்பினதும், மாகாணசபையினதும் அரசியல் என்ன என்ற தெளிவு அவசியமானது. குறுந்தேசிய இனவாதத்தையும், நவதாராளமய பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டதே கூட்டமைப்பினது அரசியல். பரந்துபட்ட மக்களுக்கு ஜனநாயகத்தை மறுப்பது போன்றே, தனது கட்சிக்குள் கூட ஜனநாயகத்தை மறுக்கின்றது. தனிநபர் சர்வாதிகாரத்தை அடிப்படையாக கொண்ட, நவகாலனிய அமைப்புக்குள்ளான மக்கள் விரோதக்கொள்கையும் பண்புகளும் கொண்ட கட்சிகளே இவை. இதன் அரசியல் சமூக பொருளாதாரக் கொள்கை, தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களையோ தமிழ் தேசியத்தையோ சார்ந்ததல்ல. மாறாக முரண்பட்ட சர்வதேச நாடுகளின் நலன்களைச் சார்ந்து, தனது குறுந்தேசிய இனவாதக் கொள்கையை முன்னிறுத்துகின்றது.

இலங்கை தொடர்பாக உலகம் தளுவிய நாடுகளின் பொது முரண்பாடுகள் சார்ந்தே, கூட்டமைப்பின் அரசியலும் அதனுள்ளான முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அரசியல் சார்ந்த இந்த முரண்பாடுகளுக்குள், தனிப்பட்டவர்களின் குறுகிய நலன்களும், கட்சி சார்ந்த நலன்களும், குறுகிய பதவிச் சண்டைகளும், கட்சிகளின் உரிமைகளும் தொடர்பான வெளிப்படையான பொது சச்சைகளும் சண்டைகளும் முன்னுக்கு வருகின்றன.

இப்படி முன்னுக்கு வந்த சர்ச்சைகளினதும் முரண்பாடுகளினதும் மூலம் இதைப் புரிந்து கொண்டவர்களும், இப்படி இதை பயன்படுத்தியவர்களும், உண்மையான அரசியல் அடிப்படையை இனம் காணவில்லை. அது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதன் மூலமே, மக்கள் விரோத அரசியலை புரிந்து கொள்ளமுடியும். இந்த வகையில்

1.சர்வதேச நாடுகளின் நலன் சார்ந்த இலங்கையின் முரண்பாட்டுக்குள், எப்படி குறுந்தேசிய தமிழ் இனவாதிகள் முரண்பட்ட அரசியல் அடிப்படையில் இயங்குகின்றனர் என்பதையும்

2.இந்த சர்வதேச முரண்பாட்டுக்குள் கட்சிகள் முதல் தனிநபர்கள் வரை எப்படி பிழைத்துக் கொள்ள, என்ன அரசியல் வழிமுறைகளைக் கொண்டுள்ளனர் என்பதையும்

3.சர்வதேச முரண்பாட்டுக்குள் முரண்பட்டவர்கள், எப்படி எந்த அரசியல் வழிமுறை மூலம் ஓரம் கட்டப்படுகின்றனர் என்பதையும்

நாம் தனித்தனியாக அரசியல் ரீதியாக புரிந்து கற்றுக் கொள்வதன் மூலம், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், தமிழ் தேசியத்துக்கும் எதிராக குறுந்தேசிய இனவாதிகளின் எப்படி இயங்குகின்றனர் என்ற உண்மையை தெரிந்து கொள்ளமுடியும்.

1.குறுந்தேசியவாதிகளின் அரசியல் முரண்பாடு என்ன?

குறுந்தேசிய இனவாதத்துக்குள்ளான முரண்பட்ட அரசியல் வழிமுறைகளைப் பயன்படுத்தித் தான், தனிநபர்கள் சார்ந்த பிழைப்புவாத முரண்பாடுகள் மேலெழுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் சார்ந்தோ, ஒடுக்கப்பட்ட தமிழ் தேசியம் சார்ந்தோ, மாகாணசபைக்குள்ளும், கூட்டமைப்புக்குள்ளும் முரண்பாடுகள் தோன்றவில்லை. மாறாக இலங்கை தொடர்பாக மேற்குநாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இருக்கக் கூடிய வேறுபட்ட இரு அணுகுமுறைகள் சார்ந்து, இதில் எதை ஆதரிப்பது என்பதே கூட்டமைப்பின் உள்ளான அரசியல் முரண்பாடாகும்.

இந்தியா இலங்கை அரசுடன் ஒத்துழைக்கும் அடிப்படையில், கையாளும் நெருக்கமான பொருளாதார அரசியல் அடிப்படையில் தான், கூட்டமைப்பில் மேலாதிக்கம் பெற்றுள்ள நடைமுறை அரசியல் இயங்குகின்றது. எந்த அரசியல் பொருளாதார அடிப்படையில் இந்தியா இலங்கையைக் கையாளுகின்றதோ, அதே அடிப்படையில் தான் கூட்டமைப்பு இந்தியாவின் அரசியல் வாலாக இயங்குகின்றது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் அரசியல் பொருளாதாரக் கொள்கைக்கும், இந்தியாவின் கைக்கூலியாக இயங்கும் கூட்டமைப்பின் கொள்கைக்கும் இடையில் எந்த வேறுபாடுமில்லை. இதனூடான முரண்பாடு தான் கூட்டமைப்பினுள்ளான முரண்பாடுகள்.

அந்த முரண்பாடுகள் மக்கள் சார்ந்ததல்ல. மாறாக மேற்குநாடுகள் இலங்கையுடன் எந்த வடிவத்தில் முரண்பட்டு அணுகுகின்றனவோ, அதே அரசியல் வழியில் இயங்க வேண்டும் என்பதுதான் கூட்டமைப்பினுள்ளான முரண்பாட்டுக்கான அரசியல் அடித்தளமாய் உள்ளது. மேற்குநாடுகள் சார்ந்த புலம்பெயர் தமிழ் இனவாத அரசியல் முதற்கொண்டு கூட்டமைப்பினுள்ளான முரண்பாடுகள் வரை, ஒத்த ஏகாதிபத்திய கைக்கூலிக்கான அரசியலாகவே காணப்படுகின்றது.

"தனிநபர் சர்வாதிகாரத்தை அடிப்படையாக கொண்ட, நவகாலனிய அமைப்புக்குள்ளான மக்கள் விரோதக்கொள்கையும் பண்புகளும் கொண்ட கட்சிகளே இவை."

ஆக இப்படி இரண்டு அன்னிய சக்திகளின் நலன் சார்ந்த அணியாக, புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடங்கி மாகாணசபை வரை பிளவுபட்ட இரு குறுந்தேசிய அரசியல் போக்குகள் இனவாதத்தை முன்னிறுத்தி முரண்பட்டு இயங்குகின்றன. இதன் பின்பாக எந்த மக்கள் நலன் சார்ந்த அரசியல் அடிப்படையும் இருப்பதில்லை என்பதே கடந்தகால வரலாறு மட்டுமின்றி, நிகழ்கால உண்மையுமாகும். யாரைச் சார்ந்து பிழைத்துக் கொள்வது என்பதே கூட்டமைப்பின் உள்ளான அரசியல் வேறுபாடுகளும், குத்துவெட்டுக்களும்.

2.தனிநபர்கள் மற்றும் குழுக்களின் பிழைப்புவாத அரசியல்

சொந்த மக்களைச் சார்ந்த சமூக பொருளாதார அடிப்படையைக் கொண்டவையல்ல, குறுந்தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட இனவாதம். ஏகாதிபத்திய நலனுக்கு அமைவான உலகம் தளுவிய நவகாலனியத்துக்கு ஏற்ப, தேசியக் கூறுகளை அழிக்கின்ற நவதாராளமாய பொருளாதாரத்தை முன்னெடுக்கும் அரசியல் சமூகப் பொருளாதாரக் கூறுகளைக் கொண்ட அரசியல் எடுபிடிகளும் கைக்கூலிகளும் தான் கட்சிகளும் கட்சி பிரமுகர்களும். இப்படி மக்கள்விரோத அடிப்படையைக் கொண்ட அரசியல் பின்புலத்தில், மக்களை ஏமாற்றி பிழைத்துக் கொள்ளும் பிழைப்புவாதம் தான் கட்சி மற்றும் தனிநபர்களின் கொள்கைகளும், அரசியல் நடத்தைகளுமாகும்.

தனிநபர்கள் தம்மை முன்னிறுத்திக் கொண்ட அரசியல் பிழைப்புவாதமே, பதவிகளை அடைவதும், அதிகாரங்களை பெறுவதுமாக முரண்படவைக்கின்றது. மக்களின் பெயரில் பொறுக்கித்தின்பதே, தனிமனித இலட்சியமாகவும், அதை மக்களின் பொது நலனாகவும் காட்டிவிடுகின்றனர். தேர்தல் அரசியல் என்பது, சொந்த நலன்களை அடைவதையே குறிக்கோளாக முன்னிறுத்தி நிற்கின்றது. இன்றைய தேர்தல் அரசியல்முறையில் தனிநபர் சார்ந்த அரசியல் நடத்தை என்பது, பொறுக்கித்தின்பதற்கான பொது வாழ்விடமாகிவிட்டது. இதுவே உலகெங்கும் தேர்தல் பின்பாக காணப்படுகின்ற பொதுப்பண்பு. பொறுக்கிகளின் பொதுத்தங்குமிடம் தான், தேர்தல் மூலமான அரசியலாக மாறிவிட்டது.

இந்த தேர்தல் முறை மூலம் திடீர் பணக்காரராவதும், பிழைத்துக் கொள்வதையும் கொள்கையாகக் கொண்டு இயங்கும் நபர்கள், கட்சிகளின் நடத்தைகளே இதன் பின்னுள்ள அரசியலாகிவிட்டது.

தங்கள் கைக்கூலி அரசியலுக்குள்ளும் ஓரம்கட்டும் அரசியல்

தேர்தல் ஜனநாயகத்தின் போலித்தனம் என்பது, மக்களுக்கு ஜனநாயகத்தை மறுப்பதே. இதே போலவே அதிகாரம், அதிகாரத்தைச் சுற்றிய ஜனநாயகமும். மக்கள் சாராத, கைக்கூலி அரசியலின் சாரம், ஜனநாயகத்தை மறுப்பதை அடிப்படையாகக் கொண்டது. அதாவது ஜனநாயகம் என்பது, நவகாலனிய வடிவத்துக்கும் அதன் நவதாராளமயமாதலுக்கும் எதிரானது. ஜனநாயகம் முதலாளித்துவ அடிப்படையைக் கொண்டது என்பதால், இதற்கு முரணானதே ஏகாதிபத்திய நவதாராளமயக் கட்டமைப்பு. நவதாராளமயத்தினுள் முதலாளித்துவ ஜனநாயகம் இயங்கவும், இருக்கவும் முடியாது. இது ஒரு அரசியல் முரண் கூறாகும்.

குறுந்தேசிய நவதாராள இனவாதத்தை அரசியல் அடிப்படையாகக் கொண்ட, ஜனநாயக விரோத அரசியல் தான், கூட்டமைப்பினதும் மாகாணசபையினதும் அரசியல் அடிப்படையாகும். இதன் பின்னான கட்சிகளும் தனிநபர்களும் கூட, ஜனநாயகத்தை மறுக்கின்ற அரசியல் நடைமுறையைக் கொண்டவராக இருக்கின்றனர். இந்த அரசியல் அடிப்படையில் தான் தமக்குள் கூட, பரஸ்பரம் ஓரங்கட்டப்படுகின்றனர்.

இந்தவகையில் இந்திய நலனுக்கு முரணான, மேற்குக்கு ஆதரவான சக்திகள் ஓரங்கட்டப்படுகின்றனர். அத்துடன் தங்கள் அதிகாரம் மூலம் தங்கள் அரசியல் நலன்களை அடையத் தடையாக இருக்கும் தனிநபர்களையும், கட்சிகளையும் ஓரங்கட்டவும் தங்கள் ஜனநாயக விரோத தனிநபர் சர்வாதிகார அரசியல் வழிமுறைகளையே கையாளுகின்றனர்.

இன்று அதிகாரத்தில் உள்ள மகிந்த குடும்பம் கையாளும் அதே அரசியல் வழிமுறைதான் இதுவும். நபர்களையும் கட்சிகளையும் பிளந்தும், பிரித்தும் கையாள்வதன் மூலம், தனிநபர் சர்வாதிகாரத்தை நிறுவுகின்றனர். தங்கள் அதிகாரம் மூலமே ஓரம் கட்டுகின்றனர். பல மந்திரிப் பதவிகளை தன்னுள் குவித்து வைத்துக் கொண்டு சர்வாதிகாரியாகவும், பதவிகளை காட்டுவதன் மூலமும் பிழைப்புவாதிகள் ஒரே குட்டையில் புரளுமாறு விடப்பட்டுள்ளனர். இப்படி சர்வாதிகாரிகளின் கீழ் ஒற்றுமை, இதுதான் குறுந்தேசியத்தின் பின்னுள்ள ஜனநாயகமாகும்.

மக்களுக்கு எதிராக ஜனநாயக விரோதமான சர்வாதிகாரியாக இருத்தல் தான் கட்சிக்குள்ளானதும், கட்சிக்கு இடையிலான அரசியல் நடைமுறையுமாகும்.

இந்த வகையில் மாகாணசபைக்குள்ளும், கூட்டமைப்புக்கும் உள்ளான முரண்பாட்டில் கட்டமைக்கப்படும் அரசியல் முதலாளித்துவ தேர்தல் ஜனநாயக முறையின் சீரழிவின் பொதுப்பண்பாகும். இன்று நவதாராளமயமே அனைத்து தேர்தல் கட்சிகளினதும், நபர்களினதும் பொதுக்கொள்கையான பின்பு, வேறுபட்ட அரசியல் கொள்கைகளோ அரசியல் நடத்தைகளுக்கோ இடம் இருப்பதில்லை.

ஒரே சாக்கடையில் புரண்டு எழுகின்ற போது அரசியல் நடத்தைகள், தனிநபர்களின் பிழைப்புவாதமும் கைக்கூலித்தனமும் முரண்பட்ட அரசியலாக முன்னிறுத்தப்படுகின்றது. லஞ்சம் ஊழல்கள் பல கோடியாக, மாபியாத்தனமே தேர்தல் நடத்தையாகி இருக்கின்றது. முதலாளித்துவ தேர்தல் என்ற "ஜனநாயக" வடிவம் நவகாலனிய நவபொருளாதார அடிப்படையில் காலாவதியாகிவிட்டது. நவதாராள பொருளாதாரக் கொள்கையால், கொள்கையற்றுப் போன அரசியல், முதலாளித்துவத்தின் பொது சீரழிவாக மாறி நிற்கின்றது.

இந்த சீரழிந்த அரசியல் தான் கூட்டமைப்பிலும், அதன் வடமாகாண சபையிலும் நடக்கும் முரண்பாட்டிலும், அதன் அரசியல் நடத்தைகளிலும் இன்று வெளிப்படுகின்றது.

இன்றைய அரசியல் செயற்பாடுகளை புரிந்து கொள்வதும், அரசியலைப் புரிந்து கொள்வதன் மூலம் செயற்படுவதும் தான், மக்களை முன்னிறுத்தி செயற்படும் அரசியலாகும்.





# இன்றைய தேவை மீண்டும் ஒரு அழிவா அல்லது எமக்கு அறிவா..!

இலங்கையில் தமிழ்மக்களின் வாழ்க்கையினை போருக்கு முன் போருக்குப் பின் என்ற நிலை கொண்டு பார்க்க வேண்டியது இன்று அவசியமாகின்றது. இந்த போர் பல ஆயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையினை பல இன்னல்களையும், இழப்புக்களையும், விரக்திகளையும் கொண்டதாக மாற்றியுள்ளது. மக்களால் தொலைக்கப்பட்டவை ஏராளம், அவற்றினை எதனைக் கொண்டும் ஈடுசெய்ய முடியாது. ஆனால் போரின் போது அரசினால் மக்களிடம் பறிக்கப்பட்ட அல்லது அபகரிக்கப்பட்ட பெரும்பான்மையான நிலங்கள் அந்த மக்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. பலாலி இராணுவ முகாமினை அண்டிய பல கிராமத்து மக்கள் வெளியேற்றப்பட்டு, அது பாரிய இராணுவம் குடிகொண்ட பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கிருந்து இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடத்திற்கு மீள முடியாமல் தவிக்கிறார்கள். இந்த மக்களின் துயரமும் கண்ணீரும் பாசிச அரசின் இராணுவ அடக்கு முறைக்குள் அமிழ்த்தப்பட்டு யாருடைய ஆதரவும் இல்லாத தவிப்பாக உள்ளது. இதே போன்று வன்னியிலும் சரி கிழக்குப் பகுதிகளும் சரி ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை இழந்த நிலையிலேயே உள்ளார்கள். இவர்களுடைய காணிகளை அபகரித்த அரசு, அதில் இராணுவத்தை குடியேற்றுவதிலும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதிலுமே முனைப்பாகவுள்ளது. போருக்குப் பின் இப்படி ஒரு அவல நிலைக்கு மாற்றப்பட்டுள்ள மக்களுடைய வாழ்க்கை நியாயங்கள் மறுக்கப்பட்டு எந்த ஆதரவுமற்ற நிலையில் நிர்க்கதியாகவுள்ளது.

இன்று தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள சமூக பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மத்தியில் ஒரு பகுதியினர் பிரச்சனை அவர்களின் வதிவிடமாகும். இந்த மக்கள் இராணுவத்துடனோ, அரசுடனோ வாதிட முடியாத பலமற்ற மனிதர்களாக உள்ளார்கள். இன்று பல வழிகளிலும் ஆதரவற்று அல்லற்படும் இந்த மக்கள் தங்களுடைய அரசின் மீதான ஆத்திரத்தையும் எதிர்ப்பையும் காட்ட மாற்று அரசியலாளர்கள் இல்லாத நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்களே இன்று மாகாணசபைத் தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டியுள்ள கூட்டமைப்பு அரசியல்வாதிகளாகும். இன்று இந்த மக்களுடைய தேவைகளையும் அபிலாசைகளையும் புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் இந்த அரசியல்வாதிகளுக்கு உண்டு. மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் செயற்பாடுகளை கண்டித்து முறியடித்து மக்களை சகல சமூகப் பிரச்சனைகளிலுமிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இவர்களுடையதே. இதனை இவர்கள் செய்யமாட்டார்கள் என்பது எந்தவிதமான சந்தேகங்களிற்கும் இடமற்ற உண்மை. ஏனெனில் இவர்கள் தேர்தலில் முள்ளிவாய்க்கால் படுகொலைகளிற்கு நீதி விசாரணை குறித்தோ சரணடைந்த போராளிகளின் விடுதலையினையோ ஆகக் குறைந்த பட்சம் அவர்கள் எங்கு உள்ளனர் என்பது குறித்து அறிவது குறித்தோ திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் குறித்தோ நில அபகரிப்புக்கள் குறித்தோ அன்றி வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்புக் குறித்தோ வாய் திறக்கவே இல்லை. மாறாக தமது வெற்றிக்காக பிரபாகரனையும் மறைந்த போராளிகளின் தியாகங்களையும் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தினர். வெற்றிக்கு பின்னர் இந்திய இலங்கை அரசுகளின் நலன்களிற்கு அமைவாக காய்நகர்த்தலில் ஈடுபடுவதுடன் தேர்தல் வெற்றிக்கு பாடுபட்ட முன்னைநாள் போராளிகளை ஒதுக்க ஆரம்பித்துள்ளது இந்த கூட்டமைப்பு.

தேர்தல் வெற்றிக்கு பின்னர் சில அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற செயற்பாடு இந்த அப்பாவித் தமிழ் மக்களை மீண்டும் அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வதாகவே இருக்கின்றது. இந்த அரசியல்வாதிகள் மொத்தத்தில் தங்களுடைய சுயநலத்திற்காக, சீமான் போன்று தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் பாணியில் தமிழ் இனவாதிகளாகவே இயங்குகின்றார்கள். இவர்களுடைய நடவடிக்கை முற்றிலும் தங்களுடைய சுயநல அரசியல் இலாபம் கொண்டதேயொழிய, தமிழ்மக்களுடைய எதிர்பார்ப்புமல்ல அந்த மக்களுடைய நலன் சார்ந்ததுமல்ல. மக்களை மந்தைகளாக கருதும் இந்த சுரண்டல் அரசியல்வாதிகள் இப்போது 60வதுகளின் எம்.ஜி.ஆர் திரைப்பட பாணியிலேயே மக்களை அணுகுகின்றார்கள்.

இதற்கு மிகுந்த உதாரணம் நாவற்குழிக் கிராமத்தில் எம்.பி சிறீதரன் மேற்கொண்ட நடவடிக்கை. இந்த தமிழ் அரசியல்வாதி, யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்து சரளமாகத் தமிழ்மொழி பேசும் சிங்கள பெண்மணியிடம் கட்டப்பொம்மன் வசனங்கள் பேசுகின்றார். சிங்கள இனவாத அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் குறித்து மக்களை அணிதிரட்டி அரசிற்கு எதிரான போராட்டத்தினை முன்னெடுப்பதனை விட்டு விட்டு நேர்மையற்ற இந்த அரசியல்வாதி, அடியாட்களோடு சென்று அந்த சாதாரண சிங்கள குடும்பத்தினை மிரட்டுகின்றார். "அரசு பலவழிகளில் மக்களை அடக்கியொடுக்குகின்றது.., மக்களின் நிலங்களை அபகரிக்கின்றது, அதை வெளிநாடுகளுக்கு தாரைவார்கிறது.., இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்த மறுக்கின்றது..," இப்படி பலவழிகளில் மக்களுக்கு எதிராக செயற்படும் இலங்கை அரசின் செயற்பாடுகளை கண்டித்து எதிர்த்து வாதிட முடியாத இந்த அரசியல்வாதி ஒரு அப்பாவிப் பெண்ணிடம் தனது வீரத்தினை காட்டுகின்றார். அந்தப் பெண் பேசும் தமிழ் மொழி ஒன்றே போதும் அந்தப் பெண்ணின் நியாயங்களை நிரூபிக்கவும், அவர்கள் எவ்வளவு காலம் தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டவும். தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களும், சிங்கள மக்களின் பிரதேசங்களில் தமிழ் மக்களும் இணைந்து வாழ்வது காலங்காலமாக நடந்து வரும் ஒரு செயற்பாடாகும். இரண்டு இனமக்களும் இணைந்து வாழ்வதும், குடும்பங்கள் சேர்ந்து வாழ்வதும் வழமையானது. இந்த மக்களுக்கிடையில் இன முரண்பாடுகளை உருவாக்கி அவர்களை மோதவிட்டு அதில் தாங்கள் அரசியற் குளிர்காய்வது தான் இந்த சிறீதரன் போன்ற தமிழ் - சிங்கள இனவாதிகளின் தேவையாகும். மகிந்தா □ கோத்தாவினால் வளர்க்கப்பட்டு வருகின்ற பொதுபலசேனா சிங்களராவய இராவணபல போன்ற இனவாத மதவாத அமைப்புக்களும் சிறீதரனும் மக்கள் மத்தியில் இனவாத மதவாத உணர்வுகளை துாண்டிவிட்டு அந்த நெருப்பில் குளிர்காயும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். சிங்கள மக்கள் மத்தியில் மாற்று அரசியல் பார்வை வரக் கூடாது என்பதற்க்காக அங்கு இனவாதம் மதவாதம் படுபயங்கரமாக கட்டிக்காக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற தமிழ் தரகு முதலாளிகள் தங்களுடைய சொந்த பொருளாதார நோக்கங்களிற்க்காக இனவாதம் பேசுகின்றனர். அப்பாவி மக்களை மிரட்டும் இவர்கள் வடக்கில் பெரும்வர்த்தகத்தில் ஈடுபடும் சிங்கள முதலாளிகளுடன் மோதுவது கிடையாது. மீள்குடியேறியுள்ள முஸ்லீம் மக்கள் குறித்து அக்கறை கொண்டது கிடையாது. ஒரு கதைக்கு நாளை மாநில சுயாட்சியோ அன்றி தனியான நிர்வாக அலகோ தமிழ் மக்களிற்கு கிடைக்கப்பெறுமானால் தமிழ் பகுதிகளில் வசிக்கின்ற முஸ்லீம் மற்றும் சிங்கள மக்கள் குறித்து இவர்களின் நிலைப்பாடு கடந்த காலத்தில் இயக்கம் செய்தது போன்று அவர்களை வெளியேற்றி துரத்தி விடுவதுதானா?

இலங்கையிலே சகல மக்களும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் - நிம்மதியாகவும் இருக்க வேண்டுமாயின், முதலில் இந்த தமிழ், சிங்கள இனவாதிகளை எமது மண்ணில் இருந்து களைந்தெடுக்க வேண்டும். இவர்களை அரசியலில் இருந்து ஓரம்கட்ட வேண்டும். மக்களை மந்தைகளாக்க நினைக்கும் இவர்களை மக்களிடம் இருந்து அன்னியப்படுத்த வேண்டியது இலங்கையில் வாழும் சகல இனமக்களுடைய கடமையாகும். இன்னொரு அழிவைத் தடுப்பது மக்களாகிய எங்கள் கையிற் தான் உள்ளது.

# அமெரிக்கா கொன்றொழித்த ஐந்து லட்சம் முஸ்லிம்கள்

பத்தாண்டுகளுக்கு முன்னால் 2003 மார்ச் 19ந்தேதி அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு படையினர் ஐ.நா. ஒப்புதல் இன்றி இராக் மீது அநியாயமாகவும், அக்கிரமாகவும் படை எடுத்ததனர். இதற்காக ஒரு பொய்யான, போலியான குற்றச்சாட்டை அவர்கள் கூறினர். - பேரழிவு ஆயுதங்களை இராக் வைத்திருக்கின்றது என்பது தான் அந்தக் குற்றச்சாட்டாகும்.

படை எடுத்த இருபத்தோரு நாட்களில் இராக் முற்றிலும் நிர்மூலமாக்கப்பட்டது. போரில் தோற்ற சதாம் ஹுசைன் தப்பி, தலைமறைவானார். 2003 டிசம்பர் 13ல் சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டு, மூன்றாண்டுகள் விசாரணை நடத்தப்பட்டு, 2006 நவம்பர் 5ம் தேதி தூக்கிலிடப்பட்டார். தூக்கிலிடுவதற்கு அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு துஜைல் என்ற ஊரில் 148 ஷியாக்களைக் கொலை செய்தார் என்பது தான். இராக்கைப் பிடித்து இத்தனை ஆண்டுகள் ஆன பின்பும் இதுவரை பேரழிவு ஆயுதங்களை அமெரிக்கா கண்டுபிடிக்கவில்லை.

கடந்த அக்டோபர் 15ம் தேதி அன்று அமெரிக்காவில் வெளியான ஒரு கல்வி ஆய்வு, "இதுவரையில் இராக்கில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்தைத் தாண்டும்" என்று குறிப்பிடுகின்றது. ஏற்கனவே, பிரிட்டனைச் சார்ந்த ஓர் அமைப்பு ஊடகத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு போரினால் ஏற்பட்ட வன்முறை மூலம் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,15,000 என்று தெரிவித்திருந்தது. அமெரிக்கா, கனடா, பாக்தாத் பல்கலைக் கழகங்கள் இந்த ஆய்வை இராக் சுகாதாரத் துறை அமைச்சகத்தின் துணையுடன் நடத்தின. போர், கலவரச் சாவுகளுடன் மட்டும் இந்த ஆய்வு நிற்கவில்லை.

போர் ஏற்படுத்திய மறைமுகச் சாவுகளையும் கணக்கில் எடுத்துள்ளது. உண்மையில் இந்தச் சாவுகள் அமெரிக்காவுடைய படையெடுப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரம், சட்ட ஒழுங்கு சீர்குலைவு மூலமும் நடந்துள்ளன. அந்த சாவுகளையும் இந்த ஆய்வு உள்ளடக்கியுள்ளது. இதற்கு முந்தி எடுக்கப்பட்ட ஆய்வுகள் இத்தனை நீண்ட ஆண்டு கால அளவை எடுக்கவில்லை.

ஆனால் இந்த ஆய்வு 2003லிருந்து 2011 வரையிலான கால கட்டத்தை எடுத்திருக்கின்றது. போர்க் கலவரம் மிக மிக அதிகமான உயிர்களைப் பலி கொண்டிருந்தாலும், மூன்றில் ஒரு பகுதியினர் போர் மூலமாகவே கொல்லப்பட்டிருக்கின்றனர். இந்த விபரம் இதற்கு முன்பு எடுக்கப்பட்ட கணக்கில் வரவில்லை. போரினால்

> **இந்தச் சண்டாள அமெரிக்காவின் ஆப்கானிய படையெடுப்பின் போது கொல்லப்பட்டோரின் புள்ளி விபரத்தைப் பார்த்தோம் என்றால் இதயம் வெடித்து விடும்.**

ஏற்பட்ட மறைமுக சாவு பற்றிக் குறிப்பிடுகையில், சில நிகழ்வுகளை அது பதிவு செய்துள்ளது.

பிரசவ வேதனையினால் துடிதுடித்துக் கொண்டிருக்கும் பெண் மருத்துவமனைக்கு உடனே போக வேண்டும். ஆனால் அவள் அவ்வாறு போக முடியவில்லை. காரணம் போர் தான். அதனால் அந்த பெண் மரணத்தைத் தழுவுகின்றாள். பாதுகாப்பில்லாத மாசுபட்ட குடிநீர் குடிப்பதால் மக்கள் மரணிக்கின்றனர். போரில் அல்லது கலவரத்தில் கடுமையான பாதிப்புக்குள்ளான மக்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற முடியவில்லை. காரணம் மருத்துவமனை தன் சக்திக்கு மீறிய அளவில் நோயாளிகள் சேர்க்கையினால் திக்குமுக்காடி, திணறியது.

இதனால் பல லட்சக்கணக்கான மக்கள் இறந்தனர். இவை மறைமுக மரணங்களுக்கு



எடுத்துக்காட்டுகளாகும் இங்கு நாம் கவனிக்க வேண்டிய விஷயம், மனித குலத்திற்கு எதிரான தாக்குதல் என்ற குற்றச்சாட்டின் பேரிலும், ஒரு 148 பேர்களைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலும் சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை என்றால் இராக்கில் மட்டும் இத்தனை லட்ச மக்களைக் கொன்ற உலா மகா பாதகன், உலா மகா கிராதகன், ஈவு இரக்கமற்ற சண்டாளன் ஜார்ஜ் புஷ் மற்றும் உத்தம புத்திரனாய், உலக மகா யோக்கியனாய் வேதாந்தம் பேசி பதவிக்கு வந்து புஷ்ஷின் பாதையில் பயணம் செய்கின்ற ஒபாமா ஆகியோருக்கு என்ன மாதிரியான தண்டணை கொடுக்க வேண்டும் என்று நியாயம் உள்ளம் கொண்டோர் சிந்திக்க வேண்டும்.

இந்தச் சண்டாள அமெரிக்காவின் ஆப்கானிய படையெடுப்பின் போது கொல்லப்பட்டோரின் புள்ளி விபரத்தைப் பார்த்தோம் என்றால் இதயம் வெடித்து விடும். அந்த அளவுக்கு அவர்களது கொலைப் பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது. இந்த அமெரிக்கா தான் இன்றைக்கு உலகில் சட்டாம்பிள்ளைத்தனம் செய்துக் கொண்டிருக்கின்றது.

இந்த அராஜகனைத் தட்டிக் கேட்க வேண்டிய இஸ்லாமிய நாடுகள் முதுகெலும்பில்லாத, கடைந்தெடுத்த கோழைகளாக இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் அமெரிக்காவின் அடிவருகிகளாகிவிட்டனர். உலகில் எங்காவது ஓரிரு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டு விட்டால் அங்குள்ள தனது தூதரகங்களேயே மூடிவிட்டு அமெரிக்கர்களை உடனே அங்கிருந்து வெளியேறச் செய்கின்ற நாடு தான் அமெரிக்கா.

தன்னுடைய நாட்டவரின் உயிர் தான் உயிர்! மற்ற நாட்டுக்காரர்களின் உயிர் மயிர் என்று நினைக்கின்ற முதல் தர சுயநலக்கார நாடு அமெரிக்கா தான்! இல்லையெனில் இராக்கில் இப்படி ஐந்து இலட்சம் உயிர்களை அநியாயமாகப் பறித்து, பலி வாங்கியிருக்குமா? அதிலும் குறிப்பாக, பேரழிவு ஆயுதங்களை இராக் வைத்திருக்கின்றது என்ற பொய்யான காரணத்தைச் சொல்லி உள்ளே அத்துமீறி நுழைந்து அந்நாட்டின் அமைதியை சீர்குலைத்திருக்குமா? இன்றளவும் அங்கு சிவகாசி சரவெடி போல் குண்டு வெடித்து உயிர்கள் அன்றாடம் அழிவதற்குக் காரணம் இந்த அக்கிரமக்காரன் அமெரிக்கா தான். தன்னை யாரும் தண்டிக்க மாட்டார்கள் என்ற தலைக்கனத்தில் இந்த அமெரிக்கா ஆடிக் கொண்டிருக்கின்றது.



# போராட்டம்

185/2A எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டே தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

## CHOGM சொக்ம்- சோகம்

முதன் முதலாக பிரித்தானிய முடியாட்சியிலிருந்து விலகிய கனடா, அவுஸ்திரேலியா நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் வசித்த வெள்ளையர்கள் பிரித்தானிய ஆட்சியலிருந்து விடுபட்டடாலும், அவர்கள் அச்சத்துடனேயே இருந்தார்கள். இந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். அதுதான் " ாூவைந ஆயச"ள ஊடரடி" . பிற்காலத்தில் அது ஊழஅஅழறெநயடவா ஊடரடி என மாறியது. வெள்ளையர்கள் பிடித்துக் கொண்ட கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் அதிகாரம் மட்டுமல்லாது பிரித்தானிய முடியாட்சியிலிருந்து பெயரளவிலான சுதந்திரம் பெற்ற நாடுகள் அவர்களால் மூளைச் சலவை செய்யப்பட்ட கனவான்களிடமே ஒப்படைக்கப்பட்டன. பிற்காலத்தில் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற அடிமை நாடுகள் அனைத்து இந்த ஊழஅஅழறெநயடவா ஊடரடி ல் இணைந்தக் கொண்டதோடு அது பொதுநலவாய நாடுகளினது தலைவர்களின் அமைப்பாக மாறியது (ஊழஅஅழறெநயடவா ர்நயனள ழக புழளெசஅநவெ ஆநநவபைெ).

இந்த பொதுநலவாய நாடுகளினது சுயநலவாயத் தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடந்து முடிந்த கையோடு இங்கு தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் அனைத்துப்பிரச்சினைகளுக் தீர்வு கிடைத்து விடும் என்று யாராவது எதிர்ப்பார்த்திருந்தால் அதைப்போன்ற கடைந்தெடுத்த முட்டாள்தனம் இருக்க முடியாது. பொதுநலவாயத் தலைவர்களின் ஊர்வலத்திற்காக பாதைகளை ஷாம்பு போட்டு கழுவி அவர்களை வரவேற்ற அரசாங்கம் இந்த மாநாட்டை (ஊர்ழுபுஆ) நடத்தி ஒன்றுக்கும் உதவாத அதன் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டுள்ளது அவ்வளவுதான்.

இந்த மாநாட்டிற்காக் மக்கள் பணம் கோடிக்கண்ககில் வாரி இறைக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பணத்தை மீள்ப்பெற வேண்டுமாயின் அதற்காக மக்கள் மீது வரிக்குமேல் வரி சுமத்த வேண்டும். அவர்களது வாழ்வாதாரங்களின் மீது சுமையேற்ற வேண்டும். மக்கள் சாப்பாட்டிற்கே திண்டாட வேண்டிய நிலை உருவாகிவிடும் ஏற்கனவே ஏற்றப்பட்ட சுமைகளை தாங்க முடியாமல் தவிக்கும் நிலையில் மேலும் சுமைகள் ஏற்றப்பட்டுவிடும். இப்போதைய நிலையில் மக்கள் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் துடித்துக்கொண்டிருக்கிறாமர்கள். வாழ்க்கைச் நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இந்த லட்சனத்தில் மாநாட்டுச் சுமையும் மக்கள் தலையில் விடிந்திருக்கிறது. கல்வியை தனியார்மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஒருபுறம் நடந்துக் கொண்டிருக்கையில், இலவசக் கல்விக்கும் ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளும் மறைமுகமாக எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்குத் தேவையான வளங்கள் வழங்கப்படுவதில்லை. பாடசாலைகள் மூடப்படுகின்றன. ஒரேயொரு சீருடையை மட்டுமே வைத்திருந்த தனது வகுப்பபைச் சேர்ந்த, வர்க்கத்தை சேர்ந்த மாணவனின் சீருடையை ஆசிரியை கத்திரியால் வெட்டுகிறார். இந்தச் சம்பவம் செய்தியாக்கப்பட்டு முதலாளித்துவ ஊடகங்களில் விளம்பரம் செய்யப்பட்ட பின்னர், அந்த மாணவருக்கு நாலாபக்கமிருந்தும் சீருடைகள் கிடைக்கின்றன. சீருடை மட்டும்தானா அந்த மாணவனின் பிரச்சினை என்பதை இந்தச் சமுதாயம் சிந்திக்கத் தவறியது வெட்கக் கேடு.

வடக்கில் யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் முள்வேலிகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களுக்குச் சொந்தமான காணிகள் காடு வளர்ப்பு என்ற போர்வையில் அரசுடைமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் அன்றாடம் சாப்பாட்டிற்கே வழிதெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த லட்சணத்தில் ஊர்ழுபுஆ களியாட்டத்தை நடத்தி, மக்கள் வரிப்பணத்தை விரயமாக்கி ஊழஅஅழறெநயடவா ஊடரடின் தலைமையை இரண்டு வருடத்திற்கு பெற்றுக் கொண்டுள்ளார் எமது நாட்டின் அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி. அப்பாடா... பிரச்சினைகள் தீர்ந்து விட்டன, எல்லாப்பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும் என்று பகற்கனவு கண்டுக் கொண்டிருக்கின்றது நவ தாராளமயத்தின் எடுபிடியான இன்றை அரசாங்கம். அதே நேரம் மாநாட்டுக்கு வந்த பிரித்தானியப பிரதமர் வடக்குக்குச் செல்கிறார். மக்களைச் சந்திக்கிறார். தகரக் கொட்டகைக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கிறார். அந்த மக்கள் மத்தியிலிருந்து ஒரு புன்னகை அவ்வளவுதான். பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? இல்லை. டேவிட் கமரூன் வடக்கிற்குச் சென்று கையசைப்பதாலோ, சனல் 4 ஊடகவியலாளர்களின் ஆவனப்படங்களினாலோ, பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று யாராவது நினைத்தால் அவரை மனோதத்துவ வைத்தியரிடம் அழைத்துக் செல்வது அவருக்கு நண்மையாக இருக்கும்.

பிரச்சினைக்குள்ள ஒரே தீர்வு இன, மத, மொழிகளுக்கு அப்பால் சென்று ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றுபடுவது மாத்திரமே, நவ தாராளமய பகற்கொள்ளைக்கு எதிராக. முதலாளித்துவத்தின் தனியார்- மய கொள்ளைக்கு எதிராக சிங்களவன், தமிழன், முஸ்லிம் என்ற பேதங்களை மறந்து மக்கள் போராடினால் மாத்திரமே, அதற்காக சமத்துவ சமுதாயமொன்றை நிறுவினால் மாத்திரமே தீர்வு காணமுடியும் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

## கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகள் இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும்

88-89 போராட்டத்தில் உயிர்ச் தியாகம் செய்த கார்த்திகை வீரர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகள் நாட்டின் பல மாவட்டங்களிலும் மற்றும் உலகின் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்றன. பெருமளவான மக்கள் கலந்துக் கொண்ட அந்த நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட சில படங்கள் கீழே காணப்படுகின்றன.

அம்பாறையில் நடந்த கார்த்திகை வீரர் ஞாபகார்த்தம்



பதுளையில்



கொழும்பில்



மாத்தறையில்



புத்தளத்தில்



அவுஸ்திரேலியாவில்



லண்டனில்



185/2a எப்பிட்டி முல்லை வீதி,பிட்டகோட்டேயில் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.